Registered as a Newspaper

பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 18 செவ்வாய்க்கிழமை (01-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:57

# பகிஷ்கரிப்பால் பாடசாலைகள் செயலிழந்தன!

## மாணவர் போராட்டம் தொடரும் சாத்தியம்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி,1

**"உரும்பிராய்ப் பகுதியில் கைது செய்யப்பட்ட தாகக் கூறப்படும் இரு பாடசாலை மாணவர்களை யும் விடுவிக்கக் கோரி யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நேற்றுமுதல் முழு அளவில்- காலவ ரையறையற்ற - பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்தும் நேற்றுச் செயலிழந் தன. இப் போராட்டம் இன்றும் தொடரும் சாத்தி யமே காணப்பட்டது.**

யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவி பிரியா சிறிஸ் கந்தராசா, அவரது சகோதரரான உரும்பிராய் சந்திரோதய வித்தி யாலய மாணவன் சிறிஸ்கந்தராசா வினோத் ஆகியோர் அவரது தாயா ருடன் சேர்த்து கடந்த 25ஆம் திகதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. முயற்சி

யாழ்ப்பாணம்,பெப்.1

உரும்பிராய் மாணவர்கள் இருவ ரையும் மூன்று நாள்களுக்குள் விடு விப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி கள் தம்மிடம் தெரிவித்துள்ளனர் என்று ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை அலுவலகத்திலும், ஈ.பி.டி.பியின் யாழ்.அலுவலகத்திலும் கூடிய மாண வர்களிடமே கொழும்பிலிருந்தவாறு தொலைபேசி மூலம் இத்தகவ லைத் தெரிவித்தார் டக்ளஸ்.

இந்த உறுதிமொழியை ஏற்று தற்காலிகமாக பகிஷ்கரிப்பைக் கை விடுமாறு மாணவர்களிடம் ஈ.பி. டி.பி. பிரமுகர்கள் கோரினர். பாடசாலை அதிபர்கள் சார்பிலும் இத்தகைய கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் மாணவர்கள் அதற்கு இணங்கியதாகத் தெரியவில்லை.

இந்தவிடயம் குறித்து தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக பத்துப் பாடசாலைகளின் மாணவர்களை ஒன்றிணைத்து ஓர் அமைப்பை உரு வாக்குவதற்கும் முயற்சிகள் எடுக் கப்பட்டிருந்தன. (உ-5)

## ரெலோவும் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,பெப்.1

மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டது குறித்து ரெலோவும் தனது ஆட்சேபனையை இராணுவ உயரதிகாரிகளுக்குத் தெரிவித் துள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களை விடுவிக்கக்கோரும் அறிக்கை ஒன்றை ரெலோவின் யாழ். மாவட்ட அமைப்பாளர் என்.கே.விந்தன் நேற்று வெளியிட்டார். (உ-7)

# இரு மாணவரையும் கைது செய்யவில்லை என்கிறது ராணுவம்!

## விசாரணைக்கு உதவவே கொழும்புக்கு அழைப்பாம்

யாழ்ப்பாணம் பெப்ரவரி,1

**"உரும்பிராயைச் சேர்ந்த மாணவர் இருவரும் அவரது தாயாரும் கைது செய்யப்படவில்லை. கொழும்பில் இடம்பெற்றுள்ள தற்கொலைத் தாக்கு தல் தொடர்பான விசாரணைகளுக்கு உதவு வதற்காக அவர்கள் கொழும்புக்குக் கூட்டிச் செல் லப்பட்டுள்ளனர்"**

**இவ்வாறு மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று உதயனுடன் தொடர்பு கொண்டு விளக் கமளித்தார்.**

ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் ஜா-எலவில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படுபவ ரின் தம்பியும் தங்கையுமே மேற்படி இரு மாணவர்களும் என்றும் -

தாக்குதலின் பின்னர் எஞ்சியி ருந்த அவரின் தலையை இந்த மாணவர்களின் தாயார் தனது பிள் ளையுடையது என அடையாளம் காட்டியுள்ளார் என்றும் -

மரபணு எனப்படும் டி.என்.ஏ பரி சோதனை மூலம் இவர்களது உறவு முறையை உறுதிப்படுத்துவதற்கா கத் தாயாரும் இரண்டு பிள்ளைக ளும் கொழும்பில் தங்கவைக்கப்பட் டுள்ளனர் என்றும் -

தமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் போராட்டத்துக்கு பல்கலை. மாணவரும் ஆதரவு

யாழ்ப்பாணம்,பெப்.1

... விடுதலை ... பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு நாமும் தார்மீக ஆதரவை வழங்க வேண்டிய நிலை உருவாகும்."

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

"இக்கைது சம்பவம் குடாநாட்டு மாணவர் மத்தியில் பெரும் வேதனை யையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள் ளது.

"மாணவர் ஒருவர் பாடசாலை ... கைது செய்யப்பட் ... கள் குறித்தும் அவர்களின் பாட சாலைகளின் அதிபர்களுக்கு கூட அறிவிக்கப்படவில்லை.

"இந்த நடவடிக்கை மாணவர் கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக் கைதுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு சம்பந்தப்பட்ட மாண வர்களை விடுவிக்கும்படியும் கோரு கின்றோம்" - இவ்வாறு அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (உ)

## விமானப் பயணத் தடை நீக்கம்

### புலிகள் அறிவிப்பு

வவுனியா,பெப்.1

குடாநாட்டுக்கான விமான சேவைகளில் பயணம் செய்யவேண்டாம் என்று பொதுமக்களுக்கு விடுத்திருந்த அறிவுறுத்தலை தளர்த்தி இருப்ப தாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

புலிகளின் இந்த அறிவிப்பு 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்றுக்காலை விடுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பர் முதலாம் திகதி 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையை ஆரம்பித்தது முதல் விமான சேவைகளைப் பயன் படுத்த வேண்டாம் என்று புலிகள் எச்சரிக்கை விடுத்து வந்திருந்தனர்.

## புலிகள் மூவர் உயிரிழப்பு

வவுனியா,பெப்.1

'ஓயாத அலைகள் - 3' நடவடிக் கையின் போது தமது தரப்பில் மேலும் மூவர் உயிரிழந்துள்ளதாக நேற்றிரவு விடுதலைப்புலிகள் அறி வித்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

* லெப்.கேணல் செங்குட்டுவன் (கந்தையா உதயகுமார் - முல் லைத்தீவு)
* கஜமுகன் (செல்வராசா செந் தில்குமரன் - யாழ்ப்பாணம்)
* தமிழன் (சச்சிதானந்தம் ஸ்ட னீஸ்லஸ் - யாழ்ப்பாணம்) (ஐ-8)

## மாகாண மட்டத்துக்கு போராட்டம் விரிவடையும்

### எச்சரிக்கிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.1

"கைது செய்யப்பட்டுள்ள இரு மாணவர்களினதும் விடுதலை துரிதப் படுத்தப்படாவிட்டால், வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் பகிஷ் கரிப்புப் போராட்டங்களை நடத்து வதற்கு ஆசிரியர்களை வழிநடத்தும் நிலை ஏற்படும் என்பதை இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறது."

இவ்வாறு சங்கச் செயலாளர் த.மகாசிவம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்று கல்வியில் ஈடுபட்ட மாணவர் களைப் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் எனத் தெரி வித்து பாடசாலையில் வைத்துக் கைது செய்வதை மது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

"அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மேற்படி மாணவர்கள் இருவரும் எந்தவிதமான சம்பவங்களுடனும் தொடர்பில்லாதவர்கள் எனத் தெரி வித்திருக்கும் பட்சத்தில் அவர்க ளது விடுதலை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் உடன் எடுக்கப் படல் வேண்டும்." - இவ்வாறு அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (உ-7)

## மட்டக்களப்பில் கையெழுத்துப் போராட்டம்

மட்டக்களப்பு,பெப்.1

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து வெளியிடங் களுக்குச் செல்பவர்களுக்கு வழங்க வென உத்தேசிக்கப்பட்டிருக்கும் 'பாஸ்' நடைமுறையை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய அளவில் கையெழுத்து சேகரிக்கும் போராட்டம்ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

மண்முனைப் பிரதேசத்துக்கான அபிவிருத்திச் சங்கம் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு மட்டக்களப்பு நகரப்பகுதி யில் ஆரம்பமாகும் இந்தக் கையெ ழுத்துப் போராட்டத்தில் பொது அமைப்புக்கள் பலவும் இணைந்து கொள்ளவுள்ளன.

சுமார் 25ஆயிரம் பேரின் கையொப்பத்துடன் தயாரிக்கப்பட வுள்ள மகஜர் ஒன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஆகி யோருக்கும் அனுப்பிவைக்கப்பட வுள்ளது. (ஐ-7-150)

## மட்டு. சி.ஐ.டி பொலிஸ் அதிகாரி சூட்டுக்கு இலக்காகி படுகாயம்!

### பிஸ்டல் குழு கைவரிசை

மட்டக்களப்பு,பெப்.1

மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.லக்ஷ் மன் நேற்றிரவு பிஸ்ரல் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு - மாமாங்கேஸ்வரர் ஆலய வீதியில் நேற்றிரவு 7மணியள வில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

படுகாயமடைந்த பொலிஸ்இன்ஸ் பெக்டர் மிகவும் ஆபத்தான நிலை யில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தமிழரான இவர் தனது மனைவி யுடன் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருடர் கோஷ்டி மீது நள்ளிரவு படையினர் சூடு!

### ஒருவர் பலி; சிலர் தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.பழைய பூங்கா வீதிப் பகுதி யில் நேற்று முன்தினம் நள்ளிரவு படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்.

வீடு ஒன்றில் புகுந்து திருடி விட்டு, திருடிய பொருள்களுடன் வந்த திருடர் கோஷ்டி ஒன்றின் மீதே ரோந்து வந்த படையினர் சரமாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

#### கொட்டடியில் சுற்றிவளைப்பின்போது

## கிரனேட் வெடிக்க வைத்து தன்னை மாய்த்த இளைஞன்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.கொட்டடிப் பகுதியில் நேற் றுப் பிற்பகல் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவிக் கப்படும் - சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க - இளைஞர் ஒருவரின் சடலம் உடல் சிதறிய நிலையில் நேற்றுப் பொலிஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

கொட்டடி சீனிவாசகம் வீதிப்பகு தியில் படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது இந்த இளைஞர் கிரனேட்டை வெடிக்க வைத்துத் தற்கொலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து) கிராமியவங்கியின் 31.3.99 மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 98/99க்கான வருடாந்த கணக்காய்வு நடைபெறுவதால் கிராமியவங்கி வாடிக்கையாளர்கள் சங்கக் காரியாலய நேரத்தில் 15.2.2000 ஆம் திகதிக்கு முன் தங்களின் புத்தக மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பொது முகாமையாளர்
அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.

(C/10874)

## நினைவலையில் ஆண்டு 7

தோற்றம் 26 - 04 - 1926



மறைவு 19 - 01 - 1993

அமரர்

உயர் திரு. **இ.ச.பேரம்பலம்** E.S.P அவர்கள்

(E.S.P & Co. நிறுவனத்தின் உரிமையாளர்)

திதி: 01 - 02 - 2000 திரியோதசி

அன்பு சொரிந்து எம்மை அரவணைத்து
ஆளாக்கி இன்பத் தொழில் பலவும் ஈந்து
நா நிலத்து நன் மக்களாக்கிய வெற்றித் தலைவனே!
விந்தை மிகு பல தொழில்கள் நாம் பயின்று
இவ் வையத்துள் பலர் வாழ்த்த வாழ்கின்றோம் ஐயாவே!
பெற்ற பிள்ளைகள் பெருஞ் சிறப்புடனும்
உற்ற மனைவி உடன் உழைத்திடவும்
சீர்த்த வாழ்வு செம்மையில் வாழ்ந்து
யாவரும் தர்மத்தின் வழி செல்ல
வழிகாட்டியே வாழ்ந்த தந்தையே!
ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
உங்களை மறவோம் ஐயாவே!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

குடும்பத்தினர்,
மணி ஓசை,
383, கோவில் வீதி,
நல்லூர்.

50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(73190)

## கண்ணீர் அஞ்சலி

எமது நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவரும்
யாழ். சீமாட்டி புடைவைக்கடல் உரிமையாளருமாகிய
லயன் **த.சற்குணராசா** அவர்களின்
பாசமிகு தந்தையார்

### கதிரவேலு தம்பிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருறும், எம் யாவரதும் அன்புக்குரிய லயன் திரு.த.சற்குணராசா உட்பட்ட சக குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கழக உறுப்பினர் யாவரும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நல்லூர் லயன்ஸ் கழகச் செயலா
**வி.எஸ்.சொக்கலிங்கமும்**
**சக உறுப்பினர்களும்**

(C/10879)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வணிகர் கழக நிர்வாகசபை உறுப்பினர்
**திரு.த.சற்குணராசா** (சீமாட்டி புடைவைக் கடல்)
அவர்களின் தந்தையார்

### கதிரவேலு தம்பிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். வணிகர் கழகத்தின்**
**நிர்வாகசபை உறுப்பினர்கள்**

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
யாழ்ப்பாணம்.

(C/10873)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.1

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் பாடசாலை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும் -

வலிகாமம்மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவி பிரதேச முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம், சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுரையை யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் நிகழ்த்துவார். (ஐ-7)

## 'செந்தாமரை' படகு சேவையில்

வேலணை,பெப்.1

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்வதற்காக 'செந்தாமரை' பயணிகள் படகு நேற்றுக்காலை வெள்ளோட்டம் விடப்பட்டது.

நீண்டகாலமாக பழுதடைந்திருந்த இந்தப் படகு 5 லட்சம் ரூபாசெலவில் -அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவியுடன் - திருத்தி அமைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் யாழ்.மாவட்ட வதிவிடப் பிரதிநிதி ஜோன் நிக்ஸன் மற்றும் தூதரக அதிகாரி மணி ஆகியோர் நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாக படகுச் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேசசெயலர் எஸ்.இரத்தினம், வேலணைப் பிரதேசசபைத் தலைவர் ந.கருணாகரமூர்த்தி, திட்டப்பணிப்பாளர் த.தட்சணாமூர்த்தி ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-6-167)

## கப்பலில் சிகரெட் வந்தது

யாழ்ப்பாணம்,பெப்.1

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த கப்பலில் சிகரெட் எடுத்து வரப்பட்டதாக புகையிலை நிறுவனத்தின் யாழ்.முகவர் தெரிவித்துள்ளார். போதியளவு சிகரெட் எடுத்துவரப்பட்டிருப்பதால் சிகரெட்டிற்குத் தட்டுப்பாடு எதுவும் ஏற்பட இடமில்லை என்றும் -

சிகரெட் பெறுவதற்கான கார்ட் பெற்றுக்கொள்ளாத வர்த்தகர்கள் தம்மிடம் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

### ராஜா

யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
கடைசி வாரமாக
**அஜித் - சிம்ரன்**
மற்றும் பலர் நடித்த
**அவள் வருவாளா?**
10.30, 2.30
(C/10360)

### லிபேட்டி

அக்சஸ்லெபி
விஜய், ஷாலினி நடித்த
**கண்ணுக்குள் நிலவு**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P :- 070 - 212223
070 - 212678
(73044)

### நாகம்ஸ்

சுன்னாகம்
**சரத்குமார்**
**தேவயானியின்**
**சூரியவம்சம்**
(ரீலீஸ்)
காட்சிகள் 10.30, 2.30
(புதிய நேரம்)
(C/10861)

## மனதார வாழ்த்துகின்றோம்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளராகச் சேவையாற்றி 12-01-2000ஆம் திகதி முதல் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றுள்ள

**கௌரவ வேலும்மயிலும் குகேந்திரன்**
**(வி.கெ.ஜெகன்)**

அவர்களுக்கும்

**திரு. சின்னையா தவராசா**

அவர்களுக்கும்

எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி.

திரு. வொலிச்சோர் அன்ரன் ஜோன்சன்.
(ஜே.பி.யூ.எம்)
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

வலிகாமம் தென்மேற்கு
பிரதேச சபை,
தலைமைச் செயலகம், மானிப்பாய். (C/10880)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
சக பாதுகாப்பு உத்தியோகத்தர்
**திரு. இராயப்பு யேசுதாசன்** அவர்களின்
அன்புத் தாயார் **திருமதி மரியம்மா இராயப்பு**
மற்றும்
அவரின் அன்புச் சகோதரர்
**இராயப்பு அந்தோனிப்பிள்ளை**

ஆகியோரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாதுகாப்பு ஆலோசகரும்
உத்தியோகத்தர்களும்
கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை.

347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/10902)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் முன்னாள் வடமாகாண
பிரதிப் பொதுமுகாமையாளரும் தற்போது
மின்சார சபையின் மேலதிக பொதுமுகாமையாளருமாகிய
**திரு.வே.இராஜேந்திரன்**
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கரன்ஸ்
பொறியியலாளர்களும்
நிர்மாணிகளும்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(73289)

உள்ளத்தை உருகவைக்கும்

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் மேலதிக பொதுமுகாமையாளர்
**திரு.வே.இராஜேந்திரன்**
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.திருமதி இரவிக்குமார் குடும்பம்
திரு.திருமதி பரமானந்தர் குடும்பம்

மீசாலை வடக்கு,
மீசாலை

(C/10873)

## கண்ணீர் காணிக்கை

திரு.சிவராசா (மூகாம்பிக் இம் பெக்ஸ்)
திரு.சிவசுண்முகராசா (மங்கை சில்க்),
திரு.சற்குணராசா (சீமாட்டி),
திருமதி புனிதவதி நவரத்தினம்
ஆகியோரின் அன்புமிகு தந்தையார்

### கதிரவேலு தம்பிப்பிள்ளை

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது பிரிவால் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், ஏனைய நெஞ்சங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்சல் ஹவுஸ்
உரிமையாளர், ஊழியர்கள்

இல.20 புதிய பஜார்,
யாழ்ப்பாணம்.

(73286)

# அனைவரும் கௌரவத்துடன் வாழ நீலன் விரும்பினார்

## நினைவு நிகழ்வில் குஜ்ரால் உரை

'அமரர் நீலன் திருச்செல்வம் சகலரும் கௌரவத்துடனும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என விரும்பினார்.

கொழும்பில் நீலன் திருச்' செல்வத்தின் நினைவு தின நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இந்தியாவின் முன்னாள் பிரதமர் குஜ்ரால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் — நீலன் திருச்செல்வம் தனது ஐம்பத்தைந்து ஆண்டு கால குறுகிய காலத்தில் ஆற்றிய பணி — தனது வாழ்க்கையை அர்ப்பணித்த விதம் —ஆகியவற்றில் இருந்து மிக முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவைப் போன்று இலங்கையும் பல சமூகங்கள் வாழும் நாடாகும். எல்லா சமூகங்களும் ஓர் உறுதியான ஐக்கியமான அரசுக்குள் தமது அபிலாசைகளை உணர்ந்து கொள்ள முடியும். ஆகவே யதார்த்தத்தைக் கட்டி யெழுப்புவதில் ஈடுபட்டிருந்த இலங்கையர்களில் நீலனும் ஒருவர்.

ஜனநாயக நாடுகளுக்குள் மக்கள் வாழ்ந்து வழிகாட்டு வதைப்போலவே ஜனநாயக நாடுகளில் வாழும் நாமும் எமது பிராந்தியத்துக்குள் கௌரவமாக ஆக்கபூர்வமான வகையில் ஒத்துழைக்க வேண்டும். இதற்கு மாற்று வழி கிடையாது—என்றார். (இ–8)

## புனரமைப்பு

வடமராட்சி வடக்கில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இடம் பெயர்வுக்குப் பின்னர் மீள புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரையில் செயற்படாமல் இருந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகளுக்குப் பதிலாக முறைப்படி பொதுக் கூட்டங்களை நடத்தி புதிய நிர்வாக சபைகள் அமைக்கப்பட்டு வருவதாகக் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தென்பகுதியிலிருந்து உ. கிழங்கு தருவிப்பதை நிறுத்துமாறு கோரிக்கை

தென்பகுதியில் இருந்து உருளைக்கிழங்கை இங்கு தருவிப்பதை நிறுத்துமாறு உடுவில் கமநலகேந்திர நிலைய விவசாய கழகத் தலைவர் செ. இலகுநாதன் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குப்பிளான், புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய், இணுவில் போன்ற இடங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள உருளைக்கிழங்கு இம்முறை அமோக விளைச்சலைக் கண்டுள்ளது என்றும் —

இந்த நேரத்தில் உருளைக் கிழங்கை தென்பகுதியில் இருந்து தருவிப்பது இங்குள்ள உருளைக்கிழங்குச் செய்கையாளர்களைப் பெரிதும் நஷ்டத்துக்குள்ளாக்கும் என்றும் —

எனவே இம்முறை உருளைக்கிழங்கை தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதை நிறுத்தும்படியும் — இலகுநாதன் அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளார்.

அதேவேளை—

யாழ்ப்பாணமாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகி உருளைக்கிழங்கு சந்தைக்கு வரத்தொடங்கியுள்ளது.

'கிரிந்த' கப்பல்மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட உருளைக்கிழங்கும் வியாபாரிகளால் தற்போது சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சந்தைகளில் உருளைக்கிழங்கின் விலை பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.

மருதனார்மடம் சந்தையில் உருளைக்கிழங்கு ஒரு கிலோ ஐம்பது ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

தென் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட உருளைக் கிழங்கினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தியான உருளைக்கிழங்கை எதிர்பார்த்த விலைக்கு விற்பனை செய்ய முடியாதிருப்பதாகவும்—

இதனால் தாம் பெரிதும் நஷ்டம் அடைய நேரிடலாம் என்றும் — யாழ்ப்பாண மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ–152)

# களுத்துறைச் சிறைக்கு விநாயகமூர்த்தி விஜயம்

கொழும்பு, பெப். 1

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் நிலை குறித்து நேரில்அறிவதற்கென அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஏ. விநாயக மூர்த்தி நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்தார்.

அவருடன் சட்டத்தரணி வண. பிதா யோகேஸ்வரனும் அங்கு சென்றிருந்தார்.

இவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்களின் நிலை குறித்து விவரங்களையும் கேட்டறிந்து கொண்டனர். (இ-7–3)

## ஸ்தாபகர் தினம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலந்து கொண்டு ஸ்தாபகர் தின நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (இ-10)


# தாம்பத்திய வாழ்வில் பொன்விழாக் கொண்டாட்டம்

02 — 02 — 2000





திரு. கோ. தியாகராசா (இளைப்பாறிய பிரதம தபாலதிபர்) திருமதி தி. நாகரத்தினம்

தலைவர்

- ஞான செல்வ விநாயகர் தேவஸ்தானம், கொய்யாத்தோட்டம்.
- கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம்.
- அஞ்சல், தொலைத்தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம்.

உப தலைவர்

- பழைய மாணவர் சங்கம், புனித பத்திரிசியார் கல்லூரி.

கௌரவ செயலாளர்

- இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை.

கௌரவ பொருளாளர்

- ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், யாழ்ப்பாணம்.

தாம்பத்திய வாழ்வில் பொன்விழாக் காணும் எமது பாசமிகு பெற்றோரை இந்நாளில் ஞானச்செல்வ விநாயகர் அருள்பெற்று சகல சம்பத்துடனும் மாண்புடனும் மகிழ்வுடனும் வாழ வேண்டி வாழ்த்துகின்றோம்.

02—02—2000 மாலை எமது இல்லத்தில் நடைபெறும் தேநீர் விருந்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

25, புது வீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(73093)


# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப் 1

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் கடந்த (ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(126354ஏ), (126354பி), (127969ஏ), (127970ஏ), (128038ஏ), (128038பி), (128030சி), (129809ஏ), (129809பி), (129809சி), (129809டி), (129823ஏ), (129823பி), (129823சி), (129823டி), (129823ஈ), (129850ஏ), (129850பி), (129850சி), (129850டி), (129850ஈ), (129926ஏ), (129927ஏ), (129927பி), (129944ஏ), (129947ஏ), (129947பி), (129947சி), (129953ஏ), (129967ஏ), (129988ஏ), (134946ஏ), (134951ஏ), (134951பி).

### யாழ்ப்பாணம்

(078623ஏ), (112535ஏ), (112535பி), (112661ஏ), (120138சி), (124476ஏ), (124635ஏ), (124730ஏ), (128412ஏ), (128412பி), (128450ஏ), (128450பி), (128450சி), (128450டி), (128450ஈ), (128459ஏ), (128460ஏ), (128530ஏ), (128547ஏ); (128598ஏ) (128613ஏ), (128613பி), (128613சி), (128613டி), (128613ஈ), (128613எவ்), (128613ஜி), (128669ஏ), (128699ஏ). (128699பி). (128669சி), (128744ஏ), (128744பி), (128744சி), (128744டி), (128751ஏ), (128755ஏ', (128776ஏ), (128782ஏ), (128782பி). (128813ஏ), (128813பி), (128818ஏ), (128818பி), (128818சி), (128818டி), (128842ஏ), (128850ஏ), (128850பி), (128871ஏ), (130026ஏ), (130026பி), (130035ஏ), (130041ஏ), (130047ஏ). (130049ஏ), (130049பி), (130049சி), (130066ஏ), (130066பி), (130087ஏ), (130091ஏ), (130091பி), (130091சி), (130096ஏ), (130099ஏ), (130107ஏ), (130113ஏ), (130114ஏ), (130114பி), (130138ஏ). (130138பி), (130143ஏ), (130143பி), (130145ஏ), 130145பி), [130145சி], [130145டி], [130150ஏ], [130156ஏ], [130156பி], [130157ஏ], [130157பி], [130161ஏ], [130171ஏ], [130182ஏ], [130182பி]. [130185ஏ]. [130188ஏ], [130188பி], [130188சி], [(30188டி], ]130188ஈ]. [130195ஏ], 130196ஏ], [130196பி], [130211ஏ], [130211பி], [130211சி], [130222ஏ]. [130222பி], [130234ஏ], [130235ஏ] [130250ஏ], [130252ஏ], [130256ஏ], [130257ஏ), [130257பி], [130261ஏ], [130264ஏ], [130264பி], [130269ஏ], [130272ஏ], [130272பி], [130272சி], [130272டி], [130295ஏ], [130299ஏ], [130301ஏ]. [130303ஏ]. [130303பி], [130303சி], [130304ஏ], [130304பி], [130308ஏ], [130310ஏ], [130316ஏ], [130316பி], [130316சி], [130317ஏ]. [130325ஏ], [130325பி], [130328ஏ]. [130334ஏ], [130336ஏ], [130346ஏ], [130348ஏ], [130350ஏ], [130352ஏ], [130355ஏ], [130364ஏ], [130369ஏ], [130369பி], [130369சி], [130383ஏ], [130384ஏ], [130384பி], [130384சி), [130384டி), [130384ஈ], [130386ஏ], [130393ஏ], [130394ஏ], [130402ஏ], [130402பி], [130402சி], [130409ஏ], [130416ஏ], [130421ஏ], [130433ஏ], [130435ஏ] [130439ஏ], [130447ஏ], ]130447பி|, [130457ஏ], [130459ஏ], ]130474ஏ], [130475ஏ], [130500ஏ], [131938ஏ], [131938 பி], [131939ஏ], [131939பி], [131939சி], [131939டி], [131939ஈ], [131939எவ்]. [131939ஜி], [131947ஏ], [131951ஏ], [131957ஏ], [131957பி], [131957சி], [131957டி], [131957ஈ], [131957எவ்], [131957ஜி], [131964ஏ], [131981ஏ], [131985ஏ], [131989ஏ], [131989பி], [131989சி], [131989டி], [131989ஈ], [131989எவ்], (131989ஜி), (131990 ஏ), (132002 ஏ), (132013 ஏ), (132021 ஏ), (132022 ஏ), (132032 பி), (132038 ஏ), (132051 ஏ), (132052 ஏ), (132065 ஏ), (132085 ஏ), (132086 ஏ), (132092 ஏ), (132097 ஏ). (133239ஏ), (133366 ஏ), (133442 ஏ), (133475 ஏ), (133475 பி), (133509 ஏ), (133509 பி), (133509 சி).

### மருதங்கேணி

(129380 ஏ).

### நல்லூர்

(126 850 ஏ), (126850 பி), (126850 சி). (128642ஏ', (128642 பி), (128663 ஏ), (128663 பி), (128663 சி), (128717 ஏ), (128718 ஏ), (128824 பி), (128824 பி), (130057 ஏ), (130057 பி), (130057 சி), (130077 ஏ), (130077 பி), (130077 சி), (130077 டி), (130977 ஈ), (130194 ஏ), (130265 ஏ), (130274 ஏ), (130302 ஏ), (130302 பி), (130307 ஏ), (130333 ஏ), (130361 ஏ), (130398 ஏ), (130419 ஏ), (131961 ஏ).

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 13 — 09 — 1908

மறைவு: 02 — 01 — 2000

## அமரர் சவரிமுத்து சந்தியாபிள்ளை

மாதவத்தால் நாம் பெற்றோம் எங்கள் வாழ்வின்
மாணிக்கம் போலொளிர்ந்து மறைந்தீர் ஐயா!
ஆதரவும் பேரன்பும் கருணை நெஞ்சும்
அன்புரையும் பொழிந்தெம்மை வளர்த்த தந்தாய்!
வேதனையின் தழும்புகளைக் காலம் மாற்றி
விழ்த்திடுமோ? ஐயா! எம் கண்ணீர் வெள்ளம்
மேதினியில் வற்றாது மேலோன் பாதம்
வீற்றிருந்தே எமக்காக வேண்டுவீரே!

அன்னாரின் மரணச் செய்தியைக் கேள்வியுற்று நேரடியாகவும் கடித மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்

குடாரப்பு,
நாகர்கோயில். (73221)

# 19.ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 03 — 1930

மறைவு: 31 — 01 — 1981

## அமரர் கதிர்காமு ஆழ்வாப்பிள்ளை

ஆண்டுகள் பத்தொன்பது மின்னி மறைந்தாலும்
காலகாலமாய் உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு என்றென்றும் அகலாது!

உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

",சிறிஇல்லம்" மனைவி, பிள்ளைகள்.
இணுவில் மேற்கு,
இணுவில். (73201)

# 91 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 19 — 07 — 1979

மறைவு: 03 — 11 — 1997

## செல்வி சரவணை வினோதினி

(யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உயர்தர கணிதப் பிரிவு மாணவி)

அன்புத் திருமகளாய்
அவனி போற்றும் சோதரியாய்
மாண்புமிகு மாணவியாய்
ஆடி ஓடி விளையாடிய வினோவே!
உமது ஆத்மா சாந்தியடைவதாக.

திரு. திருமதி சி. சரவணை
குடும்பத்தினர்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, கன்னாகம். (73235)

யாழ்ப்பாணம், பெப் 1

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (சு)

★ ★ ★

நாவற்குழி அருள்மிகு மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இன்று காலை 10 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து யாகபூசை நடைபெற்று 108 சங்குகள் கொண்டு சங்காபிஷேகம் நடைபெறும். (ஜ-10)

## சுகாதார பரிசோதகர் நியமனம்

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை மனநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கான உளவள அபிவிருத்திப் பொதுச் சுகாதார பரிசோதகராக மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய எஸ். ரவீந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எஸ். வருணநாதன் மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகராகவும், யாழ். மலேரியா தடுப்புப்பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய எஸ் திவ்யகுமார் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (ஜ-133)

## சிறார்களுக்கு பிரிவுபசாரம்

தென்மராட்சி, பெப். 1

'யுனெஸ்கோ' நிறுவனத்தினரால் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க ஆதரவுடன் மந்துவில் கிழக்கில் நடத்தப்படும் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஓராண்டு பராமரிப்பை முடித்து பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட சிறார்களுக்கான பிரிவுபசார விழா கடந்தவாரம் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி. இரத்தினசிங்கம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. பவளேந்திரனும் சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி கல்வி ஆலோசகர் திருமதி பரமேஸ்வரியும் கலந்துகொண்டனர். (ஜ-117)

## இடம்மாற்ற வேண்டாமெனக் கோரிக்கை

நவாலி, பெப். 1

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்ய வேண்டாமெனக் கோரி நவாலி, ஆனைக்கோட்டை, சாவற்கட்டு, உயரப்புலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 பொது அமைப்புகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய இணைப்பாளர் ஆகியோருக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளன. (இ-100)

## வீடு, உடைமைகள் சேதம்

# 50 பயனாளிகளுக்கு முதற்கட்ட கொடுப்பனவு

வலி. கிழக்கு, பெப். 31

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும்—வன்செயல் காரணமாக அசையும் அசையாச் சொத்துக்களை இழந்தவர்களுக்கான— நஷ்டஈட்டுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவின் முதலாம் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம்ரூபா 50 பயனாளிகளுக்கு வழங்கப் படவுள்ளது.

உரும்பிராய் கிழக்கு (ஜே—266) கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள 50 பயனாளிகளுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகளை உரியவர்கள் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-180)

## அபராதம்

வரிப்பத்திரம் இன்றி நெல்லியடியில் மினிபஸ் செலுத்தி, போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தார் என்று கூறப்படும் சாரதியை 500 ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறைமாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

2000 ஆம் ஆண்டுக்குரிய வருமான வரிப்பத்திரம் இல்லாத குற்றத்துக்கு 250 ரூபாவும் பாதையைத் தடைசெய்த குற்றத்துக்கு 250 ரூபாவும் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-109)

# பொதிகளை அனுப்பும் சேவை மறுசீரமைக்கப்படும்

தபாலில் பொதிகளை அனுப்பும் சேவைகள் மறுசீரமைக்கப்படவுள்ளன என்று கொழும்பில் தபால் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கையளிக்கப்படும் பார்சல்கள் தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துமாறும்—

பொதிகளை அனுப்புவோரின் விவரங்கள் தெளிவாக இல்லாவிட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனவும்—

நாட்டில் உள்ள சகல தபாலகங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாகக் கையளிக்கப்பட்ட பல பொதிகள் உரிய முறையில் பார்சல் செய்யப்பட்டிருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளதாகவும்—

எனவே எதிர்காலத்தில் பொதியாக்குவதற்குத் தேவையான பொருள்களையும் உறைகளையும் விநியோகிப்பதற்குத் தபால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-10]


## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், யாழ். மாவட்டம்.

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 20-1-2000 அன்று நடைபெற்று, புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. T. தவேந்திரன்
செயலாளர்: திரு. M. சிவப்பிரகாசம்
பொருளாளர்: திரு. T. வாகீசன்

ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்கள் 20 பேர்.

மு. கு:- 1) 1997 ஆம் ஆண்டில் பட்டம்பெற்று, சங்கத்தில் பதிவுசெய்து இதுவரை வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் 5-2-2000 (சனி), 6-2-2000 (ஞாயிறு) திகதிகளில் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவை உறுதிசெய்து கொள்ளவும்.

2) பதிவு செய்யாத ஏனைய பட்டதாரிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

- வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

84, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (73229)



## மணிவதனன் ஜெயச்சித்திரா 5 ஆம் ஆண்டு ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள்

கரம், பட்மின்ரன் OPENS

ஆண், பெண் இருபாலாருக்கும்.

இடம்: YMCA, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:

YMCA, கச்சேரியடி, யாழ்ப்பாணம்,
மணி வீடியோ, 52, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 02 - 2000

விளம்பர அன்பளிப்பு:

ரவி வீடியோ சென்ரர்
இல. 73, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (73245)

# காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டார்

## குஜராத் மாநிலத்தில் சம்பவம்

புதுடில்லி, பெப். 1

இந்தியாவின் எதிர்க் கட்சித் தலைவியும் காங்கிரஸ் கட்சித் தலைவருமான சோனியாகாந்தியும் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் 5 ஆயிரம் பேரும் நேற்று முன்தினம் குஜராத் மாநிலத்தில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். சிலமணி நேரங்களின் பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

குஜராத் மாநிலத்தில் அரச ஊழியர்கள் இந்து சமய அடிப்படைவாத அமைப்பான ஆர் எஸ். எஸ். அமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளலாம் என்றுமாநில அரசு அறிவித்ததற்குஎதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்,

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திருமதி சோனியா காந்தியும் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களும் கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு கொண்டு செல்லப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர் சோனியாகாந்தி விடுதலை செய்யப்பட்டார். ஏனைய தொண்டர்கள் சிலமணி நேரத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மாநில அரசின் சர்ச்சைக்குரிய இந்த முடிவு விலக்கிக் கொள்ளப்படும்வரை தொடர இருக்கும் போராட்டத்தின் ஆரம்பமே நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் என்று காங்கிரஸ் கட்சியின் செய்திப் தொடர்பாளர் அஜித்ஜோகி தெரிவித்தார்.

அதேசமயம்—

அரச ஊழியர்கள் ஆர். எஸ். எஸ் அமைப்பில் உறுப்பினர்களாக இணைவது குறித்த மாநில அரசின் முடிவினை மறுபரிசீலனை செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மாநில உள்துறை அமைச்சர் எச். பாண்டியா கூறினார்.

(இ-6)

# விபத்தில் இலங்கையர்கள் காயம்

சைப்பிரஸ், பெப், 1

சைப்பிரஸில் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 28 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலர் இலங்கையர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்த இவர்கள் பயணம் செய்த பஸ் இயந்திரக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளானதாக பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-6)

உலக அரங்கில்

# 9 வயதில் கடத்தப்பட்ட சிறுமி 10ஆண்டுகளின் பின் விடுவிப்பு

## ஜப்பானில் சம்பவம்

டோக்கியோ, பெப். 1

ஜப்பானில் 9 வயதுச் சிறுமியாக இருந்த சமயம் கடத்தப்பட்ட ஒரு பெண் 10 வருடங்களின் பின்னர் — தனது 19 ஆவது வயதில் — விடுவிக்கப்பட்டுள்ளார்.

1990ஆம்ஆண்டு பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் சிறுமி கடத்தப்பட்டார். பின்னர் கடந்த வெள்ளியன்று இளம் பெண்ணாக அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தலைநகர் டோக்கியோவில் இருந்து 250 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றில் தான் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் — கடத்தப்பட்டதில் இருந்து 8 வருடங்களாக வானொலி ஒன்று மட்டுமே தனது பொழுது போக்குக்காகத் தரப்பட்டது என்றும் —

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டது என்றும் — அந்தப் பெண் தெரிவித்தார்.

தனது பெண்ணை 10 வருடங்களின் பின்னர் கண்ட தாய் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். இவர் எதற்காக கடத்தப்பட்டு 10 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படவில்லை. (இ-6)

# கென்ய விமான விபத்தில் 150 பேர் வரை உயிரிழப்பு

## இதுவரை 10 பேர் உயிருடன் மீட்பு

அபிஜான், பெப். 1

கென்யன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான எயார் பஸ் - 310 ரக விமானம் ஒன்று நேற்று அதிகாலை மேற்கு ஆபிரிக்கக் கரைக்கு அப்பால் விபத்துக்குள்ளாகிக் கடலில் வீழ்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

நேற்று அதிகாலை 2 மணிக்கு ஐவரிக்கோஸ்ரின் தலைநகர் அபிஜான் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கென்யத் தலைநகர் நைரோபி நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த விமானத்தில் 169 பயணிகள் உட்பட 179பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்று திடீரெனக் கடலில்வீழ்வதை அவதானித்தோம் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்

நேற்றுப் பகல் வரை இடம் பெற்ற மீட்புப் பணிகளின் போது 8 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் மேலும் இருவர் நீந்திக் கரைசேர்ந்துள்ளனர். மேலும் 6 பேரின் சடலங்களும் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளன.

உயிருடன் இருப்பவர்களையும் சடலங்களையும் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனினும் ஏனையோர் உயிருடன் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகவே காணப்படுவதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

[இ-6]

# பிரிட்டனுக்கு செல்லும் ஆசியர் பிணைப்பணம் செலுத்த வேண்டும்

## புதிய சட்டம் தயாராகின்றது

லண்டன், பெப். 1

எதிர்காலத்தில் பிரிட்டனுக்கு பயணம் செய்ய விரும்பும் ஆசிய நாட்டவர்கள் தமது பயணத்துக்கான 'வீசா' பெற முன்னர் 16 ஆயிரம்டொலரைப் பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும் என்ற புதிய சட்டம் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கம் விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.

இதற்கான முன்னோடித்திட்டம் ஒன்றை தாம் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ஆசிய நாடுகளில் இருந்து பிரிட்டனுக்கு தேவை கருதி பயணம் செய்யும் பயணிகள் தமக்கு வழங்கப்படும் விசாவைப்பயன் படுத்தி பிரிட்டனிலேயே நிரந்தரமாகத் தங்கி விடுகின்றனர் என்றும் —

இவ்வாறு பிரிட்டனில் குடியேறும் சட்ட விரோத குடியேறிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவே இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் —

அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்படுவது குறித்த தகவல்கள் வெளியாகியதுமே அதற்கு எதிரான கண்டனங்களும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டன.

ஆனால் 'வீசா' பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது பெறப்படும் பிணைப்பணம் அந்தப் பயணி தனது நாடு திரும்பும் போது அவரிடம் மீண்டும் ஒப்படைக்கப்படும் என்றும் —

நாட்டினுள் அனுமதிக்கப்பட்டால் சட்ட விரோதமாக பிரிட்டனில் குடியேறி விடுவார்கள் என்று கருதப்படுபவர்களே கட்டாயம் பிணைப்பணம் செலுத்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்றும் —

பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது. (இ-6)

# த.மா.கா சட்டமன்றஉறுப்பினரின் இராஜினாமா ஏற்கப்படவில்லை

## சட்டமன்றத் தலைவர் தெரிவிப்பு

சென்னை, பெப். 1

த. மா. கா சட்டமன்ற உறுப்பினர் ஆர். சொக்கர் தனது பதவியை இராஜினாமா செய்வதாகத் தெரிவித்து சட்டமன்றத் தலைவர் பழனி வேல்ராஜனுக்கு அனுப்பிய கடிதத்தை வேல்ராஜன் ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மயிலாடுதுறையில் நடைபெற்ற அரச நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பழனிவேல்ராஜன் இதனைத் தெரிவித்தார்.

ஆர். சொக்கரின் இராஜினாமாவை ஏற்க தமக்கு மனமில்லை என்றும் அவர் கூறினார்.

சிறந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரை இழக்க நான் விரும்பவில்லை. அவரது ராஜினாமா குறித்து தமிழக முதலவர் மு. கருணாநிதியிடமும் பேசினேன். சொக்கர் தமது பதவியை இராஜினாமா செய்யாமல் இருந்திருக்கலாம் என்றே கருணாநிதி என்னிடம் தெரிவித்தார்.

இவ்வாறு பழனிவேல் ராஜன் மேலும் சொன்னார்.

(இ-6)

# திருமதி மெடலின் ரஷ்யா விஜயம்

மொஸ்கோ, பெப். 1

அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் திருமதி மெடலின் ஆல்பிறைற் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். நேற்றுக் காலை அவர் மொஸ்கோ வந்து சேர்ந்தார்.

செச்சினியாவில் ரஷ்யப் படையினரின் செயற்பாடு மற்றும் அணு ஆயுதக் கட்டுப்பாடு ஆகியன குறித்து மெடலின் ரஷ்ய பதில் அதிபர் விளாடிமிர் புடினுடன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யா செச்சினியாவில் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை காரணமாக ரஷ்யா உலக அரங்கில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடும் என்று மெடலின் ஆல்பிறைற் மொஸ்கோவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதேசமயம் —

செச்சினியாவில் கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 200 செச்சினியத் தீவிரவாதிகள் ரஷ்யப் படையினரிடம் சரணடைந்ததாக ரஷ்யா நேற்று அறிவித்தது. இவர்களில் 128 பேர் நேற்று முன்தினம் மட்டும் சரணடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது- (இ-6)

# கார்கிலில் மீண்டும் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தயாராகிறது

## தலிபான் அதிகாரி தகவல்

நியூயோர்க், பெப். 1

கார்கிலில் இடம்பெற்ற தாக்குதல் போன்று இந்தியாவுக்கு எதிரான மற்றொரு தாக்குதலை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது என்று ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி மேற்கு நாடு ஒன்றில் தஞ்சமடைந்துள்ள தலிபான் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்துள்ளன.

தலிபான் இராணுவ உயர் அதிகாரியான மௌலவி அப்துல் ரசூல் ராம்ஷா என்பவரின் நெருங்கிய சகா ஒருவரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தியா மீதான தாக்குதலுக்கான உத்தரவை வெளிநாட்டுக் கூலிப்படையினருக்குப் பாகிஸ்தான் இராணுவம் இரகசியமாக விடுத்துள்ளது. பாகிஸ்தானின் ஐ. எஸ். ஐ. உளவுப்பிரிவு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. அத்துடன் சிறிய ரகப் பீரங்கிகள் மற்றும் சக்தி வாய்ந்த நவீன ஆயுதங்கள் என்பவற்றையும் அது கூலிப் படையினருக்கு வழங்கி வருகின்றது.

இந்தியாவின் ஜம்மு—காஷ்மீர் மாநில எல்லையில் உள்ள ஜம்மு—ஸ்ரீநகர் மற்றும் ஜம்மு — பூஞ்ச் நெடுஞ் சாலைகளைக் கைப்பற்றி எல்லையில் உள்ள இந்தியப்படையினருக்கான விநியோகங்களைத் தடுத்து நிறுத்துவதே பாகிஸ்தானின் திட்டம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வாழ்த்துக்கள்

**2000 ஆம் ஆண்டு கூட்டுறவு வைத்திய சாலைகள் அமைந்திட அயராது உழைத்த கூட்டுறவாளரான**

## தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம்

அவர்களின் நூற்றாண்டாக அமைகிறது. இவரது நினைவு தினமான பெப்ரவரி முதலாம் திகதியை 'மருத்துவர் தினம்' ஆகச் சிறப்பிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

**கூட்டுறவாளர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுக் குழு**

திருநெல்வேலி. (73275)



## உடன் தேவை

மெஷின்மைன்டர்

அத்துடன் அச்சக வேலைகளில் அநுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. முன்னுரிமை வழங்கப்படும். சம்பள விவரம் நேரில்.

**ஸ்ரீசச்சிதானந்த பிரசுராலயம்,**
**கைதடிச் சந்தி, கைதடி.**

(73267)


## கண்ணீர் அஞ்சலி

உயர் தொழில்நுட்ப நிறுவன ஊழியர்

**திரு. க. பிரதீபன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னையா - கனகசுந்தரம் (கனகர்)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்.

உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்.

(73263)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும்



**அமரர் முருகையா சுப்பிரமணியம்**

அன்னை மடியில் **1912 - 11 - 23**

ஆண்டவனடியில் **2000 - 01 - 02**

தம்புருவளையான் கருணையால் பிறந்தாய் தரணியில்
இமயமலை என உயர்ந்தாய்

தெம்புடனே உன் வாழ்நாள் கழித்தாய்
தெளிவுடனே எம் முடிவும் எடுத்தாய்

வம்பு எதற்கும் போகாதிருந்தாய்
வந்த பிள்ளை அனைத்தையும் வளர்த்தாய்

அம்புவியில் எண்பத்தேழாண்டு இருந்தாய்
அனைவர் உயர்வும் கண்டு மகிழ்ந்தாய்

வெம்புகின்றோம் இன்றும் உன்னை
எண்ணி வேறென்ன நூறாண்டு கண்டாய்இவ்வையே

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பெருவெட்டி ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை. (சி/10903)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 1

பளை, மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். [க]

## தென்னை தறிப்பு

அரியாலை, பெப். 1

கொழும்புத்துறை மேற்கு வளன்புரம் பகுதியில் பயன் தரும் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன.

தனியார் வளவில் இருந்த தென்னை மரங்களே கடந்த வெள்ளிக்கிழமை தறித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (இ-17)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் நடத்தப்படும் கருத்தரங்குத் தொடரின் ஏழாவது கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பௌதிகத் துறை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ''கதிர்வீச்சுச் சிகிச்சை முறையின் பௌதிக அம்சங்கள்'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அணு மருத்துவப் பிரிவு விரிவுரையாளர் சரசானந்தராஜா சிவானந்தம் கருத்துரை வழங்குவார். (க-4)

## விசேட பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், பெப். 1

பட்டினிக்கெதிரான நிறுவனம், யுனிசெவ் மற்றும் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து நடத்தும் வீட்டுத்தோட்ட விளை பொருள்களை பெறுமதி அதிகரித்துப்பாதுகாத்தல் பற்றிய விசேட பயிற்சிநெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

நான்கு நாள்கள் நடைபெறவுள்ள இந்த பயிற்சி நெறி 12 தொகுதிகளைக் கொண்டதாகும். எனவே ஆர்வமுள்ள பயனாளிகள் தமது பகுதி குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பட்டினிக்கெதிரான நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ—10)

## மிருதங்க அரங்கேற்றம்

நல்லூர், பெப். 1

செல்வன் லக்மன் சத்தியமூர்த்தியின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகஇந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இந்துப்பேரவைத் தலைவர் அருட்கவி வி. விநாசித்தம்பி, யூனியன் கல்லூரி முதல்வர் எஸ். புண்ணியசீலன் ஆகியோரின் ஆசியுரையும் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் வி. மு. நவரத்தினம், பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் ஆகியோரின் மதிப்புரையும் இடம்பெறும்.

இசையரங்கில் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் பாட்டு இடம்பெறும். (இ-103)

## விமான பயண...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (கடந்த ஜனவரி, 31 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

**சங்கானை**

(123544ஏ), (123544பி), (123544சி). (123544டி), (123544ஈ), (125048ஏ), (125048பி), (125048சி), (129062ஏ), (129073ஏ), (129215ஏ), (129218ஏ), (129280ஏ), (129280பி), (129294ஏ), (129493ஏ), (129924பி) (130680ஏ), (130701ஏ), (130701பி), (120701சி), (130702ஏ), (130703ஏ). (130712ஏ), (130823ஏ),

**நெடுந்தீவு**

(12664 எ), (12677 ஏ), (12677 பி), (12677 சி), (12677 டி), (12677 ஈ). (12681ஏ). (12681 பி), (12681 சி), (12681 டி), (12707 ஏ), (12718 ஏ), (12719 ஏ), (12719 பி), (12743 ஏ), (12743 பி), (12745 ஏ), (12745 பி),

**யாழ்ப்பாணம்**

(133243 ஏ),

**ஊர்காவற்றுறை**

(0000 ஏ). (0000 பி), (11565 ஏ), (11565 பி), (11565 சி). (11918 ஏ), 12391ஏ). (12391பி), (12391சி), (12575ஏ), (12591ஏ), (12591பி), (12591சி), (12591டி), (12591ஈ), (12631ஏ), (12631பி), (12667ஏ), (12684ஏ), (12691ஏ), (12691பி), (12695ஏ), (12706ஏ), (12706பி), (12724ஏ), (12724பி), (12724சி), (12732ஏ). (12734ஏ). (12735ஏ). (12748ஏ), (12749ஏ), (12750ஏ), (12751ஏ) (12752ஏ), (12752பி), (12756ஏ), (12760ஏ), (12763ஏ), (12763பி), (12763சி) (12763டி), (12768ஏ), (12769ஏ), (12773ஏ),

**கோப்பாய்**

(124094ஏ), (124094பி), (124094சி), (124098ஏ), (124098பி), (128115ஏ), (128115பி), (128132ஏ), (128132பி), (128132சி), (128170ஏ), (128170பி), (128191ஏ), (128282ஏ), (128282பி), (133124ஏ), (133124பி), (133124சி), (133919ஏ), (133919பி), (133920ஏ), (133920பி), (133921ஏ), (134922ஏ), 133922பி), (133934ஏ), (133976ஏ), (133976பி), (133977ஏ), (133977பி), (134045ஏ), (134076ஏ) (134076பி), (134076சி), (134076டி). (134302ஏ), (134302பி), (134303ஏ), (134303பி), (134346ஏ). (134346பி), (134346சி), (131346டி), (130599ஏ), (130599பி).

**நல்லூர்**

(128076ஏ), (128076பி), (128076சி). (128076 டி)) (133183ஏ), (133240ஏ(, (133242ஏ), (133250ஏ), (129154ஏ(, (129154பி), (129298ஏ), (129298பி) (130559ஏ), (130559பி(, (130614ஏ), (130614பி), (130614சி), (130655ஏ), (130741ஏ), (130815ஏ), (130819ஏ), (131605ஏ), (131605பி), (131605சி), (131605டி), (134471ஏ), (134472ஏ).

**சண்டிலிப்பாய்**

(129077ஏ), (129077பி), (129077சி), (129094ஏ). (129185ஏ), (129185பி). (129483ஏ), (129483பி), (129483சி, (129483டி), (130595ஏ), (130646ஏ, (130687ஏ), (130769ஏ), (130769பி, (130810ஏ),

**தெல்லிப்பழை**

(133889ஏ), (129057ஏ), (129057பி), (130597ஏ), (130688ஏ), (130738ஏ), (130817ஏ).

**உடுவில்**

(123834 ஏ), (123834பி), (123834 சி), (133886 ஏ), (134210 ஏ), (134210 பி), (134210 சி), (134283 ஏ), (134288 ஏ), (134292 ஏ), (134297 ஏ),(125038 ஏ), (129106 ஏ), (129211 ஏ), (130594 ஏ), (130618 ஏ), (130678 ஏ), (130697 ஏ), (130697 பி), (130697 சி), (130744 ஏ), (130830 ஏ), (131659 ஏ), (134803 ஏ), (134804 பி)

**வேலணை**

(12497ஏ) (12497பி), (12497சி), (12497டி), (12497ஈ), (12497எவ் (12497ஜி) , (12596ஏ), (12660ஏ), (12675ஏ), (12710ஏ), (12711ஏ) (12711பி), (12712ஏ), (12738ஏ), (12728பி), (12739ஏ), (12739பி), (12739சி), (12739டி), (12739ஈ), (12739எவ்), (12739ஜி), (12740ஏ), (12740பி), (12746ஏ), (12754ஏ), (12754பி), (12767ஏ), (12776ஏ), (12777ஏ), (12778ஏ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 1930 — 06 — 06



மறைவு: 2000 — 01 — 02

**திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்**

அன்னாரின் மறைவை அறிந்து அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் அவரது இறுதிக் கிரியைகள் வரை உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று [ 01—02—2000 ] செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

**க. தர்மலிங்கம், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [73264]

# உதயன்.

## தலையிடுக!

உரும்பிராயில் அக்கா, தம்பியான இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து குடாநாட்டு மாணவர்கள் திரண்டு எழுந்து பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை சூடாகிப் போயிருக்கின்றது.

இப்பத்தி எழுதப்படும் வரை தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை.

குடாநாட்டில் எவரையாவது கைது செய்வதாயின் உடனடியாக அது தொடர்பான ரசீது ஒன்றை சம்பந்தப்பட்டோரின் உறவினர்களுக்கு கைது செய்யும் அதிகாரி வழங்க வேண்டும் என்பது பொதுவான நடைமுறை. குடாநாட்டில் கைது செய்யப்படுவோர் காணாமற் போவதைத் தடுப்பதற்காக இந்த நடைமுறையைத் தாங்கள் அமுல் செய்திருப்பதாக அரசு வெளியுலகுக்கு பீற்றி வருகின்றது. ஆனால் கொழும்பிலிருந்து வந்த — புலனாய்வுக் குழுவினர் என்று கூறப்படும் — அதிகாரிகள் குழு சம்பந்தப்பட்ட இரு மாணவரையும் தாயையும் காதும் காதும் வைத்தாற் போல கைது செய்து குடாநாட்டுக்கு வெளியே 'கடத்தியும்' கொண்டு போய்விட்டது. ஆனால் இன்னும் கைது செய்ததை உறுதிப்படுத்தும் ரசீது ஏதும் வழங்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட இருபாடசாலை மாணவரில் ஒருவர் பாடசாலையில் வைத்து அதிபருக்கு அறிவிக்கப்படாமல் கைது செய்யப்பட்டிருப்பது மிகப்பாரதூரமான விடயமாகும். குடாநாட்டில் பாடசாலை நிர்வாகம், மாணவர் பாதுகாப்பு ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் ஓர் அத்துமீறிய செயலாகும் இது.

பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை விடுதலைப் புலிகள் தமது போராட்டத்துக்குச் சேர்த்துக் கொள்வதாகத் தெரிவித்து — சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை புலிகள் மதிப்பதில்லை என்று [illegible] ரீதியில் பிரசாரம் செய்துவரும் அரசும், ஐ.நா. அமைப்புகளும், தொண்டர் நிறுவனங்களும் சட்ட ரீதியான ஓர் அரசாங்கத்தின் இச்செயல் குறித்து என்ன கூறப்போகின்றன?

சிறுவர்களைப் புலிகள் தமது அணியில் சேர்த்துக் கொள்வது உண்மை என்று வைத்தாலும் கூட அவர்களில் பெரும்பாலானோர் தாமாக விரும்பியே தமது இயக்கத்தில் சேர்வதாக விடுதலைப் புலிகள் சொல்கின்றனர். அப்படி முடிவு செய்யும் வயதும் பக்குவமும் அச் சிறுவர்களுக்கு உள்ளதா என்பது வேறு விவகாரம்.

ஆனால் இங்கு பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர், சிறுமியர் பெற்றோரின் — அதிபரின் — கவனத்துக்குக் கொண்டு வரப்படாமலேயே — அவர்களின் விருப்புக்கு மாறாக — கைது செய்யப்படுகின்றனர்; தனிமையாக அடைத்து வைக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகின்றார்கள் — அதுவும் சட்ட ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட — சர்வதேச உலகுக்குப் பதில் கூற வேண்டிய — அரசினால்!

ஐ. நா. குழந்தைகள் நிதியம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகளும், உள்ளூரில் குழந்தைகள், சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதைத் தடுப்பதில் கரிசனை காட்டும் அமைப்புகளும் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட வேண்டும்.

பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கைது செய்யப்படுதல், விசாரிக்கப்படுதல், தடுத்து வைக்கப்படல் ஆகியவை தொடர்பாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற நடைமுறைகள் இங்கு அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை இந்த அமைப்புகள் செய்வது அவசியம்.

# தீவக கல்வி வலய மாணவர் இலக்கிய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 1

'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே அண்மையில் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:—

**சித்திரம்**

முதலாம் இடம்:- சே. றொபின்சன் (நாரந்தனை றோ. க. வித்தியாலயம்)

இரண்டாம் இடம்:- இ. தயாளினி (கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம்)

மூன்றாம் இடம்:- செ. ஜெறன்ஸ் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

**கவிதை**

முதலாம் இடம்:- எஸ். ஜெனற்றொகானி (கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம்.

இரண்டாம் இடம்:- யோ. ரதீபன் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்).

மூன்றாம் இடம்:- வே. ஸ்ரீதேவி (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.

**கட்டுரை**

முதலாம் இடம்:- ச. நிமலவாசுகி (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தியாலயம்)

இரண்டாம் இடம்:- யோ. மரியவிநோதினி (கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம்).

மூன்றாம் இடம்:- யோ. றஜனிகா (காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி).

**நாடகம்**

முதலாம் இடம்:- நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தியாலயம்.

இரண்டாம் இடம்:- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

மூன்றாம் இடம்:- கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம்.

**நடனம்**

முதலாம் இடம்:- கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம்.

இவர்களுக்கான பணப் பரிசுகள் யாவும் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களும், குழுக்களும் மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-10)

## குருபூசையும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், பெப். 1

திருக்கேதீச்சரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 12 ஆவது ஆண்டுக் குருபூசையும் மானிட வாழ்வின் மகத்துவம் என்னும் நூல்வெளியீடும் அம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இம்மாதம் 12ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சி. தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் சி. தில்லை நடராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக இந்துசமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் ந. பரம்சோதி, இந்துசமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் குமார் வடிவேல், கம்பவாரிதி இ. ஜெயராஜ், சப்பிரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் க. நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-5)

## சிறுவர் நாடகப் போட்டி

கொக்குவில், பெப். 1

கல்வி மறுசீரமைப்பை அடிப்படையாகக் கொண்ட சிறுவர் நாடகப்போட்டி யாழ். வலயப் பாடசாலைகளிடையே கடந்த 18 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம் முதலாவது இடத்தையும் அச்சுவேலி சரஸ்வதி மகாவித்தியாலயம் இரண்டாவது இடத்தையும், கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

[இ-69]

## கப்பலில் யூரியா

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் 'ஸிரிந்[illegible]' கப்பலில் ஆயிரத்து 250மெற்றிக்தொன் யூரியா எடுத்துவரப்பட்டுள்ளது.

கடந்த 1999/2000 வருடத்துக்கென இரண்டாயிரத்து 668 மெற்றிக் தொன் உரவகைகள் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கமநலசேவை நிலையங்களூடாக ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட போதிலும் மேலதிக தேவைக்கென யூரியா எடுத்து வரப்பட்டுள்ளது.

எனவே யூரியாவுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை எனவும் விவசாயிகள் அதிக விலை கொடுத்துவாங்க வேண்டாம் எனவும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள வயல்களில் நெல் அறுவடை முடிந்ததும் விதைப்பதற்கென 20 மெற்றிக் தொன் கௌப்பியும் 10 மெற்றிக்தொன் பயறும் எடுத்துவரப்பட்டுள்ளன.

எனவே தேவையான விவசாயிகள் தம்து பகுதி கமநல சேவை நிலையங்களின் ஊடாக இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

பண்டத்தரிப்பு

## கிராமிய வைத்தியசாலை முழு அளவில் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு பெப். 1

பண்டத்தரிப்புக் கிராமிய வைத்தியசாலையை முற்றாகப் புனரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

புனரமைப்பு வேலைகள் முடிவடைந்தவுடன் இம்மாத இறுதியில் இந்த வைத்தியசாலை இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிய வருகின்றது.

1990 இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் மேற்படி வைத்தியசாலை செயலிழந்ததுடன் இதன் கட்டடங்களும் இராணுவ நடவடிக்கைகளின்போது முற்றாகச் சேதமடைந்திருந்தன.

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் இந்த வைத்தியசாலை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் 20 இலட்சம் ரூபா செலவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினரால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

மாதகல், பெரியவிளான், மாரீசன்கூடல், பிரான்பற்று, பண்டத்தரிப்பு, போன்ற இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்கள் தற்போது தமது வைத்திய தேவைகளுக்காகத் தூர இடங்களில் உள்ள சங்கானை, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைகளுக்கும், தனியார் மருத்துவமனைகளுக்கும் சென்று வருகின்றனர்.

இந்தக் கிராமிய வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டவுடன் இப்பகுதி மக்களின் வைத்தியசாலைத் தேவைகளும் இலகுவாக்கப்படும் என நயப்படுகிறது.

(இ-152)

# சோளம் மூலம் கோழித் தீனை இங்கேயே உற்பத்தி செய்யலாம்

## அறுவடை விழாவில் உரை

கைதடி, பெப். 1

நெல்லுக்குப் போட்டியாக இல்லாது புறம்பான முறையில் யாழ். மாவட்டத்தில் சோளச் செய்கையை ஊக்குவித்துக் கால்நடை, கோழித்தீன் வகைகளை இங்கேயே தயாரிக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு ஆலோசகர் திருமதி டாக்டர் ஞா. சிவபாதசுந்தரம்.

கைதடி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் அமைந்த கமநல கேந்திர நிலையத்தில் யாழ். உதவிவிவசாயப் பணிப்பாளர் க. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற சோளம் அறுவடை வயல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

கோழித்தீன் தயாரிக்கும் இரண்டு இயந்திரங்கள் ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கொழும்பு வந்துள்ளன. விரைவில் அவை யாழ்ப்பாணம் கொண்டுவரப்படும்.

1999 — 2000 ஆம் ஆண்டுக்கான இத் திட்டத்தின் மூலம் ஐம்பது ஹெக்டேயரில் சோளம் பயிர் செய்யப்பட்டு பெருவெற்றி அளித்துள்ளது. இவ்வாண்டில் ஐந்நூறு ஹெக்டேயரில் செய்கை பண்ணத் திட்டமிடப்பட்டுள்ளது — என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பேசுகையில் முதன் முறையாக மானாவாரிச் சோளப் பயிர்ச் செய்கைக்கு தென்மராட்சிப் பிரதேசம் சென்ற ஆண்டு தெரிவு செய்யப்பட்டு சிறந்த வெற்றியைத் தந்துள்ளது. இதற்காக ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் ஆலோசகரையும், கமநலசேவைத் திணைக்களத்தையும், விவசாயத் திணைக்களத் தொழில் நுட்ப வழிகாட்டல் உத்தியோகத்தரையும் பாராட்டுகின்றோம்.

அதிக நிலப்பரப்பில் குறைந்த செலவில் சோளப் பயிர் செய்து அதிக லாபம் அடையலாம் என்பதை விவசாயிகள் இப்பொழுது நன்கு அறிந்துள்ளனர். எமது விவசாயப் பெருமக்களுக்கு நாம் நன்றி கூறவேண்டியவர்களாவோம் — என்றார்.

யாழ். கமநல உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் பேசுகையில், பரீட்சார்த்தமாகச் செய்கை பண்ணப்பட்ட சோளப்பயிர்ச் செய்கை வெற்றியளித்துள்ளது. தொடர்ந்து இதனை விவசாயிகள் முன்னெடுக்க வேண்டும் — என்றார்.

இந்த விழாவில் விவசாயப் போதனாசிரியர்கள், திட்ட ஆலோசகர்கள், யாழ். அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ. ஆறுமுகராசா மற்றும் விவசாயிகள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

மாதிரிச் சோளச் செய்கை, மாதிரி நெற் செய்கை, மாதிரிப் பழச் செய்கை, மாதிரி வீட்டுத் தோட்டம் என்பவற்றைக் கமநல விவசாய அலுவலர்கள் சென்று பார்வையிட்டுப் பாராட்டினர்.

(இ-71)

## நாளை

தை 19

புதன்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 1.59 வரை

நட்சத்திரம்: மூலம்

பிற்பகல் 2.47 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 5.06—6.36

ராகுகாலம்: 12.36—2.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

இன்றே செய்யவும் வேண்டும்; அதுவும் இப்பொழுதே செய்யவும் வேண்டும். இன்னும் நாளை, நாளை என்பீரானால் அது நம்முடைய நாளாவதும், நமனுடைய நாளாவதும் அறியமாட்டீர்.

- கபிலர்

## காங்கேசன் செல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 1

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் கையளிப்பார். (இ-10)

## தேடுதல்

யாழ்ப்பாணம், பெப். 1

நேற்று முன்தினம் நீர்வேலிப் பகுதியில் உள்ள மாசுவன் மற்றும் அச்செழு, ஈவினை ஆகிய பகுதிகள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

இப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 பொதுமக்கள் தெற்குப் புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களது குடும்பப் பதிவு அட்டைகள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் அனைவரும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

தம்பகாமம், பளை எனும் முகவரியைக்கொண்ட யோன் கனகம்மா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (306991213V) விசேட அடையாள அட்டை என்பன மாம்பழம் சந்திக்கும் யாழ். பஸ் நிலையத்துக்குமிடையில் கடந்த 12—01—2000 அன்று தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். குவிங்கிள் ஸ்ரார் பேக்கரி 173, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு. T.P. 2448.

(73246)

தர்மராஜா எழில் றிட்சாட்சன் என்ற சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவனது விசேட அடையாள அட்டை (0903039611) 764. இல. பாடசாலை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி பாடசாலையில் அல்லது அள வெட்டி தபாலகத்தில் ஒப்படைத்து உதவவும்.

(73233)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சுப்பர் ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. ப. கிருஷ்ணமூர்த்தி 114/19, நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை) யாழ்ப்பாணம். போன்: 2789.

(73252)

## திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உள்ளனர். படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(T.P.NO. -021-3383).

(73259)

## தவறிவிட்டது

நாவற்குழி சந்தி, கைதடியைச் சேர்ந்த இராமநாதன் யசோதா என்பவரது விசேட அ. அ. (இல. 091047937) கைதடிக்கும், நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆனந்தபவான் (பிள்ளையார் கோயில் முன்பாக) கைதடி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(73254)

உரும்பிராய் மேற்கு அன்னங்கையைச் சேர்ந்த ராஜி சின்னையா என்பவரது விஷேட அடையாள அட்டை (இல 0903028282) இணுவிலுக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் 28-01-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(73256)

# சேவை நலன் பாராட்டு

சென்ற வருட சாவகச்சேரி
வணிகமன்றச் செயலாளரும்
ராஜ்வேல்ஸ் றெக்ஸ்ரைல் உரிமையாளருமான

**திரு. K. தவராஜா**

அவர்கள் வணிக மன்றத்துக்கும் வணிகர்களுக்கும் பொதுப்பணிகளுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைக்கு அவரைக் கௌரவித்து பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

**வணிக மன்ற நலன் விரும்பிகள்
நண்பர்கள்.**

(73272)

# இளங்கலைஞர் மன்றம் ஆண்டுப் பொதுக்கூட்டம்

மேற்படி மன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 2000 - 02 - 27 ஆம் திகதி காலை 9-30 மணியளவில் மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் தங்கள் உறுப்புரிமையைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய கடைசித் திகதி:

**2000 - 02 - 14**

புதிதாக மன்றத்தில் சேரவிரும்புவோர் அத்தினத்துக்கு முன் எமது அலுவலகத்தில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

சோ. பத்மநாதன் — தலைவர்
எஸ். பத்மலிங்கம் — செயலாளர்

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(73257)

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் இந்திரா ஹாட்வெயர்ஸ் உரிமையாளர்
**பெரியதம்பி முத்தையா**
அவர்களின் மகனும் தற்போதைய மேற்படி
ஸ்தாபனத்தின் உரிமையாளருமாகிய

**P.M. தவராஜா**

அவர்கள் 30-1-2000 அன்று சிவபத்மடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைவதோடு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகியும் ஸ்தாபன ஊழியர்களும்,
இந்திரா ஹாட்வெயர்ஸ்,**
131, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(73261)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின்
மேலதிக பொது முகாமையாளர்

**திரு. வே. இராஜேந்திரன்** அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் மற்றும் அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ந. இராஜ கோபால்
குடும்பத்தினர்.**

ஸ்ரீ நாகேந்திரபவனம்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி-10872)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

உரும்பிராய் **புனித மிக்கேல் ஆலய
சுவாமி ஞானப்பிரகாசர்
இளைஞர் ஒன்றியத்தினரால்**
நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின்
பரிசு பெறும் இலக்கங்கள்

1 ஆம் பரிசு 4610 — 2 ஆம் பரிசு 1124 — 3 ஆம் பரிசு 1271

ஆறுதல் பரிசு பெறும் இலக்கங்கள்

★ 1658 ★ 220 ★ 2707
★ 1396 ★ 298 ★ 4576
★ 329 ★ 4003
★ 5408 ★ 1682

இந்த இலக்கங்களை உடையவர்கள் ஒரு வாரத்துக்குள் மேற்படி முகவரியில் இலக்கங்களை ஒப்படைத்து பரிசினைப் பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்.

(73265)

# கண்ணீர் அஞ்சலி

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில்
**பிரதமகுருக்கள்**
அவர்களின் தர்மபத்தினி

**திருமதி பா. ரதிரூபாம்மா**

அவர்கள் 25 - 1 - 2000 இல் சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

தானு வாசுதேவக் குருக்கள்
குடும்பத்தினர்.
கோண்டாவில்.

(73268)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1920 — 05 — 04
மறைவு 2000 — 01 — 02

**திருமதி சின்னத்துரை சுபத்திரை**

மறைந்து விட்ட சூரியனே மறுபடியும் உதிக்காயோ!
மங்கிவிட்ட மணி விளக்கே ஒளிதுலங்க மாட்டாயோ!
மார்பளவு கண்ணீரில் மன ஓடம் தாழுதம்மே!
மறுபடியும் வந்திங்கு கரைசேர்த்து மகிழுமம்மே!

நாடகம் முடிந்ததென்று வேடத்தைக் கலைத்தனையோ!
காலம்தான் வந்ததென்று கணக்கதனைமுடித்தனையோ!
பாசம் குறைந்திடுமோ! பந்தம் அறுந்திடுமோ!
பார்புகழும் மாதரசி மனமுன்னை மறந்திடுமோ!
பாச வலைதன்னில் சிக்கி விட்ட வெண்புறாவே!
கால யமவேடன் கவர்ந்தெங்கோ சென்று விட்டான்!
பாவி மனம் துடிக்குதம்மே! பரிதவித்து மாளுதம்மே!

எங்கள் அன்புத் தாயாரின் மறைவின்போது நேரில் கலந்து கொண்டும், கடித மூலமும் எம் துன்பத்துடன் பங்குகொண்டு எமக்கு ஆறுதலும், அனுதாபங்களும் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (01 - 02 - 2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு. சி. ஜெயவீரசிங்கம்,**
(I. C. R. C வெளிக்கள உத்தியோகத்தர்)
**சகோதரர்கள், குடும்பத்தினர்.**

பொற்பதி வீதி, நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[73262]

# UNIVERSITY OF JAFFNA

Invitation of Bids for Providing ConsultancyServices

Sealed bids are invited from qualified consultants/consultancy firms for the consultancy service for the interior decoration works for the Auditorium at Faculty of Medicine, University of Jaffna.

Forms for bidding can be purchased from Works Engineer (Civil), University of Jaffna until 18-02-2000 upon producing receipt for the payment of following fee in cash at the shroff s counter, University of Jaffna.

Non — refundable — Rs. 750 00
Refundable — Rs. 5000.00

Bids to be sent to reach Chairman, Tender Board University of Jaffna or deposited in the tender box kept at Registrar 's office, University of Jaffna not later than 10. 00 a. m. on 16—03—2000

Related documents can be inspected free of charge at Maintenance branch, University of Jaffna during office hours.

Dr. K. KUNARASA
Registrar ,
University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/10901)

# தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் கொண்ட சபைமூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## மல்வத்த தேரர் யோசனை

கொழும்பு, பெப். 1

தம்து நாட்டுக்கு ஏற்ற ஆட்சிமுறை எது என்பதை இங்குள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் அறிஞர்கள் கொண்ட சபை ஒன்றின் மூலம் தயாரித்து அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

கண்டி ஸ்ரீ தலதாமாளிகை குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 25 ஆம் திகதி கண்டியில் பிக்குமாரால் நடத்தப்பட்ட ஊர்வலத்தை அடுத்து நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் மல்வத்த பௌத்த பீட சங்கசபை உறுப்பினர் அனுத்கமகே தம்மானந்த தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நாம் தொடர்ந்து எதிர்த்து வந்த அரசியல் தீர்வுத் திட்டத்தைக் கைவிட்டு அதையே வேறு பெயரில் கொண்டுவரச் சிங்கள அரசியல்வாதிகள் முயல்கின்றனர். எமது நாட்டில் இனவாதமே இல்லை. பயங்கரவாதமே உள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தப் போவதாக எமது அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புக்கு முன்பு கண்டி இராஜ வீதியில் ஸ்ரீ தலதா மாளிகையின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட இரும்புத் தண்டவாளத்தை அகற்றியது யார்? அவர்கள் தான் பயங்கரவாதிகளுக்குப் பாதை அமைத்துக் கொடுத்த அரசியல்வாதிகள். நமது மக்கள் அரசியல்வாதிகளுக்குப் பின்னால் சென்று தங்கள் பிள்ளைகளுக்கு வேலை வாங்குகிறார்கள்.

அரசியல்வாதிகள் சுயநலப் போக்கில் சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றனர். நாட்டில் பௌத்த சிங்களவர்கள் எதுவித பேதமும் இன்றி ஒன்றுபடவேண்டும்.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா? அப்படியானால் அவர்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதா? யாரால் எப்போது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

சிங்கள பௌத்தர்களுக்காகக் குரல் கொடுக்க அவர்களை ஒற்றுமைப்படுத்த முன்வந்த ஒரே ஜனாதிபதி வேட்பாளருக்கு 35,000 வாக்குகளே கிடைத்துள்ளனபௌத்த சிங்கள மக்களே சிந்தியுங்கள். வடக்குக்கு சிங்கள மக்கள் போக முடியாது. வடக்கில் வாழ முடியாது. தெற்கில் தமிழர்கள் எங்கும் போகலாம், வாழலாம். இனவாதம் என்பதே நம் நாட்டில் இல்லை — என்றார்.

(இ—3—4)

# வவுனியா மாவட்ட தற்போதைய நிலைமை குறித்து அறிக்கை

வவுனியா, பெப். 1

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய நிலைமை சம்பந்தமான விரிவான அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலக இணைப்பதிகாரி எஸ். சிறிதரன் விரைவில் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்கவுள்ளார்.

வன்னிப் பகுதிக்கான உணவு விநியோகம், வவுனியாவில் நடைமுறையிலுள்ள வதிவிடப் பாஸ் முறை ஆகியவற்றால் பொதுமக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் மற்றும் எரிபொருளுக்கான பாஸ் நடைமுறை ஆகியவை பற்றியதாக இந்த அறிக்கை அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்கள் குறித்து வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருடன் தான் கலந்துரையாடியதாகவும் —

அப்போது அரச அதிபர் இந்த விடயங்கள் குறித்துத் தன்னுடைய இயலாமையைத் தெரிவித்ததையடுத்தே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் — இணைப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு இந்த மாதம் 474 லொறிகளில் உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு அனுமதி கிடைத்தபோதிலும் இது வரை 379 லொறிகளில் மட்டுமே உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை —

மற்றும் வவுனியாவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஒரே வகையான சீருடை அணிந்திருப்பதால் பொதுமக்கள் கைதுசெய்யப்படும் பொழுது கைது செய்தவர்களை இனங்காண முடியாத நிலைமை —

ஆகியவை சம்பந்தமாகவும் தனது அறிக்கையில் குறிப்பிடவிருப்பதாக சிறீதரன் மேலும் கூறினார். (இ-7-164)

## தொழில் நுட்ப கல்லூரி இன்று ஆரம்பம்

கொக்குவில் பெப். 1

விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள யாழ். தொழில் நுட்பக் கல்லூரி முதலாம் தவணைக்காக இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தாக்குதலில் காயம்

நீண்டகாலமாக இருந்து வந்த காணித் தகராறு கைகலப்பில் முடிந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தகப்பன், தாய், மகள் ஆகியோர் அடிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் ஞாயிறன்று அனுமதிக்கப்பட்டனர்.

வரணி இயற்றாலையைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான வேலாயுதபிள்ளை (வயது 52), மனைவி ஆச்சிமுத்து (வயது 50), மகள் சிறீவதனி (வயது 24) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

வில்லுத்தகடுகள், உலக்கை, பொல்லுகள், கம்பிகள் என்பவற்றால் கடுமையாகத் தாக்கப்பட்ட இவர்கள், நினைவிழந்த நிலையில், அயலவர்களால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அங்கிருந்து அம்புலன்ஸில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

(இ-8)

# 2ஆவது கட்டப் பணம் தாமதம்; வீடுகளைத் திருத்தமுடியாத நிலை!

அளவெட்டி, பெப். 1

வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வரும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் ஒழுங்காக, உரிய காலத்தில் வழங்கப்படாமையினால் வீட்டுவேலைகளை தொடங்கியவர்கள் அவற்றை முடிக்க முடியாது திண்டாடுகின்றனர் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த பலருக்கே இப்பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இரண்டாம் கட்ட நிதியாக 15 ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக பிரதேச செயலகம் சென்று கையொப்பமிட்ட பலருக்கு இன்னமும் இந்தப் புனர்வாழ்வு நிதி கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது.

இதனால் வீட்டு வேலைகள் அரையும் குறையுமாக கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கே இப்புனர்வாழ்வு, புனரமைப்பு நிதி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-13)

# கிராமப் பண்பாட்டைத் தெளிவுபடுத்தி நாடகக் கலைக்குப்பலம்சேர்க்கும் நூல்

## வெளியீட்டு விழாவில் உரை

நல்லூர், ஜன. 31

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு எமது தேசிய கலை வளத்தைக் கிராமியப் பண்பாட்டோடு தொடர்புபடுத்தி எழுதப்பட்ட 'சின்னவனா? பெரியவனா?' என்ற இந்த நூல் நாடகக் கலைக்கு மேலும் பலம் சேர்க்கிறது.

இவ்வாறு கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை எழுதிய 'சின்னவனா? பெரியவனா?' நாடக நூலை வெளியிட்டுப் பேசிய யாழ். பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த செல்வி மாதவி சுந்தரம் பிள்ளை கூறினார்.

யாழ். இலக்கிய வட்டத்தின் சார்பில் இடம்பெற்ற நூல் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக பதிவாளரும் இலக்கிய வட்டத் தலைவருமான கலாநிதி க. குணராசா தலைமையில் அல்லைமையில் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெற்றது.

செல்வி மாதவி சுந்தரம் பிள்ளை அங்கு பேசும்போது மேலும் கூறியதாவது:-

மேலை நாட்டவர்கள் தமது கருத்துக்களைச் சொல்வதற்கு எமது கலைகளைப் பயன்படுத்துகின்றார்கள். இந்திய சமுதாயத்திற்கு உகந்ததாக - மனித சமுதாயத்திற்கு ஏற்றதாக — ஆக்கப்பட்ட இக்கலை வடிவில் சமகாலப் பிரச்சினைகள் ஓர் இலக்கிய மரபு போல் கூறப்பட்டுள்ளது. வடமோடி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு, என்பன வட்டக்களரியில் பாடப்படுவது. அரங்க விளக்கங்களுடன் ஒரு சிந்து நடைக் கூத்தைத் தந்த முதலாவது ஆசிரியர் இந் நூலாசிரியராகவே இருப்பார் என நம்புகிறேன் — என்றார்.

கலாநிதி க. குணராசா தமது தலைமையுரையில் கூறியதாவது:-

தமிழ் எழுத்தாளர்கள் தமது நூல்களை வெளியிடுவது தமிழ் கூறும் உலகிற்கு ஓர் ஆரோக்கியமான செய்தி. விற்பனை அளவு பற்றிச் சிந்திக்காமல் ஒரு சிறந்த நாடக நூலை வெளியிட்ட ஆசிரியரின் தைரியம் பாராட்டப்பட வேண்டும். யாழ். பல்கலைக் கழகம் ஈழத்து இலக்கியத்துக்கு அளிக்கும் கௌரவம் போன்று வேறு பல்கலைக் கழகங்களில் கிடையாது. தமிழ்த்துறையில் ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிய தகவல்கள் உண்டு. ஈழத்து வாசகர்கள் ஆரோக்கியமான கூட்டம். எமது தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி அறிந்துள்ளனர். செல்லத்துரை அவர்கள் ஒரு மூத்த கலைஞர் கல்வியாளர். சங்கீதத்தைத் தெரிந்து வைத்துள்ளவர். மேடை அரங்கியல் புரிந்ததால் "சின்னவன் பெரியவன்" என்ற இந்த நூலை எழுத அவர் பொருத்தமானவர். 'முனக வெடித்த மொட்டு' என்ற அவரது நாவல் சிறந்தது. நவீன சிறுகதை, காவியம், நாவல்கள் என்று அவரின் அனுபவங்களைப் புரிந்துகொள்ள முடியும். இந்த நூல் காலமெல்லாம் தமிழ் மக்களால் பேசப்படும்; ஆய்வுக்கு உட்படுத்தப்படும்—என்றார்.

பேராசிரியர் (நந்தி) சிவஞானசுந்தரம் பேசும்போது கூறியதாவது:

இது கோலியாத்கதை. குருக்ஷேத்திரப் போராட்டம். பெரிய அளவில் நடந்தது இது சிறிய அளவில் நடக்கிறது. பகவத்கீதை உள்ளது போன்று நல்ல விடயங்களை நல்லவர் எழுதினால் அது நன்றாக இருக்கிறது. எழுத்தாளனுக்கு ஒழுக்கம் அவசியம். அது நூலின் பிரதிபலிப்பாக உள்ளது. புத்தகத்தை விட அதை எழுதியவரை எனக்கு நன்கு பிடிக்கிறது— என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன் பேசும்போது கூறியதாவது:

அவர் வேலை செய்த கல்விப் புலத்தில் மட்டுமன்றி மலையகத்தில் கொடி கட்டிப் பறந்த அவரது நாடகமுயற்சி, அதில் கிடைத்த வெற்றிகள் இந்த நூலில் புலப்படுகிறது. சிந்துவகை கதை, சொல்ல ஏற்ற எளிமையான அடி நிலை. பாரதி மக்களைச் சென்றடைய இதுதான் காரணம். வட்டக்களரி எமது கூத்து மரபு. மேல் நாடுகளில் ஒருமுக அரங்கு. வட்டக்களரியில் இருந்து சற்று வித்தியாசமான சிந்துநடை இது. 'எமது வாசலுக்கு நீ யுத்தத்தைக் கொண்டு வந்தாய்' என்பதும் தெய்வ சித்தத்தால் பலமடைதலும் இன்றும் நடக்கும் என்ற நெறி இந்த நூலூடாக வெளிப்படுகிறது - என்றார்.

கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, நூலாசிரியர் கலாபூஷணம் செல்லத்துரை ஆகியோரும் பேசினார்கள்.

நூலின் முதற் பிரதியை மாதவி சுந்தரம்பிள்ளையிடம் இருந்து எஸ். ராஜேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

[ஐ—163]

# ஈ.பி.டி.பி. கட்சி எம். பியின் பாதுகாப்பு விலக்கப்பட்டது

## ஹர்த்தாலின் எதிரொலி

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. இராசமாணிக்கத்துக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று முன்தினம் நண்பகலுடன் விலக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு அ. இராசமாணிக்கம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து அவரது மட்டக்களப்பில் உள்ள இல்லத்தில் இந்த மூன்று பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் வந்த திடீர் உத்தரவை அடுத்து பொலிஸார் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டனர் எனவும்—

கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு நகரில் "பாஸ்" நடைமுறையை எதிர்த்துத் தாம் நடத்திய ஹர்த்தாலின் எதிரொலியாகவே இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டதாகவும்— ஈ.பி.டி.பி. அமைப்பு அறிவித்துள்ளது. (இ-7)

## விபத்தில் காயம்

வேலை செய்து கொண்டிருந்த ஜெனரேட்டரின் விசிறியில் தவறுதலாகக் கையை வைத்தஒருவர் இடது கையின் மணிக்கட்டின் கீழ் துண்டாடப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஞாயிறு இரவு அனுமதிக்கப்பட்டார்.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த ஜோர்ஜ் பாலசிங்கம் (வயது 54) என்பவரே கை துண்டாடப்பட்ட நிலையில் தொடர்ச்சியான இரத்தப் பெருக்குடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் ஆவார். (இ-8)

# மிதிவெடி பற்றிய கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன், பெப். 1

வலிகாமம் பிரதேசத்தில் மிதிவெடிகள் அதிகமாகக் காணப்படும் இடங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அப்பகுதிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினால் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆசிரியர்கள் கிழமையில் ஒரு பாடவேளை அல்லது ஒவ்வொரு நாளும் 5 நிமிடங்கள் மிதிவெடி பற்றியும், அதனால் ஏற்படக்கூடிய அபாயங்கள் பற்றியும், ஏற்பட்டால் செய்ய வேண்டிய முதலுதவி பற்றியும் மாணவர்களுக்கு விளக்கம் அளிப்பர்.

இந்த விடயம் தொடர்பாக மார்ச் மாத நடுப்பகுதியில் வகுப்பு ரீதியாகப் பரீட்சைகள் நடத்தி அந்தந்த பாடசாலை, ஆசிரியர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. என்று தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி சமாதான முயற்சியை முன்னெடுக்குக!

## தேசிய காணி சீர்திருத்த அமைப்பு கோரிக்கை

கொழும்பு, பெப். 1

வடக்கில் மேற்கொள்ளப்படும் சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்திச் சமாதானத்தைக் கொண்டு வர, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய காணி, விவசாய சீர்திருத்தத்துக்கான அமைப்பு பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

காணி, விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனமான இந்த அமைப்பு அரசுக்கு விடுத்துள்ள அவசர வேண்டுகோள் ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலமே நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த முடியும். அத்துடன் வறிய மக்களின் வாழ்க்கையையும் சீராக்க முடியும்.

எனவே யுத்தம் நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வைக் காணச் சகல ஏற்பாடுகளையும் அரசு உடன்எடுக்க வேண்டும்—

இப்படி அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-164)

## வடமராட்சி கிழக்குக்கு தொலைபேசி இணைப்பு

வடமராட்சி, பெப். 1

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு முதன்முறையாக மோட்டோறோலோ தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது.

குடாநாட்டில் யாழ். நகரம் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகள், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்கு கேபிள் தொலைபேசிகளும் —

யாழ். நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் அனைத்துக்கும் இதுவரை சுமார் ஆயிரம் மோட்டோறோலா தொலைபேசி இணைப்புக்களும் — வழங்கப்பட்டுள்ளன. ஆனால் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மோட்டோறோலா தொலைபேசி இணைப்பு வழங்கப்படாதிருந்தது.

இப்பகுதியில் இருந்து தொலைபேசி இணைப்புக் கோரிப் பலர் விண்ணப்பித்திருந்த போதிலும் தற்போது இப்பகுதியில் அம்பனில் உள்ள தனியார் ஒருவருக்கு இத் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது.

(இ-173)




## ஒருநாள் போட்டிகளில் சாதனை!

கேப்டவுன், பெப். 1

இங்கிலாந்து அணியின் மிதவேகப்பந்து வீச்சாளர் மார்க் ஈலம் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

தென் ஆபிரிக்காவில் நடைபெற்றுவரும் முத்தரப்புக் கிரிக்கெட் போட்டித் தொடரில் ஸிம்பாப்வே அணியுடனான ஆட்டத்தில் ஸிம்பாப்வே அணியைச் சேர்ந்த ஐந்து வீரர்களை எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இந்தப் புதிய சாதனையை அவர் நிலைநாட்டியுள்ளார்.

ஸிம்பாப்வே அணித் தலைவர் அன்டி ப்ளவர் உட்பட ஐவரை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் அன்றைய ஆட்டத்தை இங்கிலாந்து அணி வெல்ல வழிவகுத்ததால் அன்றைய ஆட்ட நாயகனாகவும் இவரே தெரிவு செய்யப்பட்டார்.

(இ-8)

## 8 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வெற்றி

கேப்டவுன், பெப். 1

மூன்று நாடுகளுக்கு இடையே தென் ஆபிரிக்காவில் நடைபெற்றுவரும் ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஸிம்பாப்வே அணியை 8 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாயடி ஸிம்பாப்வே அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

ஹீத் ஸ்டிரீக் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப்பெற்றார். மார்க் ஈலம் 15 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி 32.1 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றது. நிக் நைட் 72 ஓட்டங்களையும் அணித் தலைவர் நஸீர் ஹுஸைன் 66 ஓட்டங்களையும் விளாசினர். (இ-8)

## பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி

அபுதாபி, பெப். 1

ஈராக்கிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அரபு நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தற்போது நடைபெறுகிறது.

அல்ஜீரியா, எகிப்து, ஜோர்தான், லிபியா, மொரோக்கோ, டியூனீசியா, பலஸ்தீனம் ஆகிய நாடுகளின் பெண்கள் உதைபந்தாட்ட அணிகள் இந்தப் போட்டித் தொடரில் பங்குபற்றி வருகின்றன.

இந்தப் போட்டிகளில் விளையாடும் பெண்கள் அனைவரும் இஸ்லாமிய முறைப்படி உடை அணிய வேண்டும் என்பது முக்கிய அம்சமாகும். கறுப்புக் காற்சட்டையும் மேலாடையும் தலைப்பகுதியும் மூடப்பட்டிருக்கவேண்டும் என்பது முறை ஆகும்.

ஒரு நாட்டு அணியில் ஐந்து வீரர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(இ-8)

## இலங்கை அணி பங்குபற்றும் போட்டிகள்

கொழும்பு, பெப். 1

புத்தாயிரம் ஆண்டில் இலங்கைக் கிரிக்கெட் அணி பன்னிரண்டு சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளது.

இதில் பாகிஸ்தான் அணியுடன் மூன்று போட்டிகளிலும், இந்திய அணியுடன் மூன்று போட்டிகளிலும் தென் ஆபிரிக்க அணியுடன் மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து அணியுடன் மூன்று போட்டிகளிலும் விளையாடும்.

(இ-8)

## விண்ணப்பப் படிவங்களுக்குத் தட்டுப்பாடு

நவாலி, பெப். 1

யாழ். மாவட்டத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் யாழ். செயலகத்தின் ஊடாகப் பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கப்படும் இப் படிவங்கள் முடிவடைந்து பல மாதங்களாகியும் இங்கு வந்து சேராமையினால் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கும் பலர் இப் படிவங்களைப் பெறப் பிரதேச செயலகங்களுக்கு அலைந்து திரிகின்றதை அவதானிக்க முடிகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-100)

## ஒடியோ நிகழ்ச்சித் தொடரில்

யாழ்ப்பாணம், பெப். 1

சாந்தானந்தா சரஸ்வதி சுவாமிகளின் விரிவுரைகள் அடங்கிய ஒடியோ நிகழ்ச்சித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.15 மணிமுதல் 6.15 மணி வரை 'அவதார புருஷர்' எனும் தலைப்பிலான விரிவுரை ஒலிபரப்பப்படும்.

இந்த நிகழ்ச்சி இலக்கம் 48, கோயில் வீதி, எனும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று வருகின்றது.

(க)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். இந்து சமயப் பேரவைக் கௌரவ செயலாளர் சைவத்திரு. சி. சக்திகிரீவன் எழுதிய ''முருகன் புகழ்'' நூல் வெளியீடு எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு செல்வச் சந்நிதி, சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஸ்ணஐயர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானகுமாரனும் மதிப்பீட்டுரையினை கவிஞர் கல்வயல் வே. குமாரசுவாமியும் நிகழ்த்துவர்.

[க-10]

# செய்திக் கொத்து

## இலவச தட்டச்சுப் பயிற்சி வகுப்பு

காரைநகர், பெப். 1

ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழகங்களின் அங்கத்தவர்களுக்கான இலவசதமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிற்சி வகுப்புக்கள் ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள இளைஞர் கழகங்களின் சம்மேளனக் காரியாலயத்தில் மிகவிரைவில் நடைபெறஉள்ளதாகத் தீவக இளைஞர் சேவை உத்தியோகத்தர் க. நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் இப் பயிற்சி வகுப்புக்கள் இந்த ஆண்டின் முதற் காலாண்டுக்குரிய பயிற்சி வகுப்புக்கள் எனவும் இதில் 20 பயிற்சியாளர்கள் வீதம் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(க-73)

## அபராதம் விதிப்பு

நெல்லியடி, பெப். 1

சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்து கசிப்பு விற்றவரை 4 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கெருடாவில் வடக்கு, தொண்டமானாறைச் சேர்ந்த கறுப்பாஸ் கிட்டினன் (வயது 45) என்பவரை கடந்த 21 ஆம் திகதி கைது செய்த வல்வெட்டித்துறைப் பொலீஸார், இவரைக் கடந்த 26 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

(க-109)

## தட்டுப்பாடு

அரியாலை, பெப். 1

யாழ். நகரில் 'எவரெடி' சாதாரண அளவு பற்றறிகள் மற்றும் பென்ரோர்ச் பற்றறிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது (க-17)

## பெரிய புராணப் படலம் படிப்பு

கொழும்புத்துறை, பெப். 1

புலோலி பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலய அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயிலில் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை காலை பெரிய புராணப் படலம் படிப்பு ஆரம்பமாகியுள்ளது.

(க-30)

## முறைசாராக் கல்வி

புன்னாலைக்கட்டுவன், பெப். 1

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் முறைசாராக் கல்வித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

மரந்தளபாடம் செய்தல், உடையமைத்தல், ஆங்கில, தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, வீட்டு மின் இணைப்பு, விவசாய இயந்திரம் திருத்தல், சிகையலங்காரமும் ஒப்பனையும், மோட்டார் கார் திருத்துதல் கணனிப் பயிற்சி, எழுத்தறிவூட்டல் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. கே. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(க-133)

## வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்

நவாலி, பெப். 1

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அப்பிரிவுக்குட்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (க-100)

## கொள்வனவு

வலி. தென்மேற்கு, பெப். 1

மானிப்பாய் வலி. தென்மேற்குப் பிரதேச சபை அலுவலகத்திற்கென புதிய றோணியோ இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை —

'பக்ஸ்' இயந்திரம் விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(க-185)

★ ★ ★

நெடுந்தீவு, பெப். 1

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம் கல் உடைக்கும் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது இந்த இயந்திரம் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்துள்ளது. (க-111)

★ ★ ★

வேலணை, பெப். 1

வேலணைப் பிரதேச சபைக்கென ஒரு ''போட்டோஸ்ரட்'' இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரதேச சபைப் பாவனைக்கென றோனியோ இயந்திரம் ஒன்றும் கொள்வனவு செய்யவுள்ளதாக அவர் கூறினார். (க-167)

## பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், பெப் 1

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையப் பயிற்சிகளை சுவீடிஷ் அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

அபிவிருத்தி நிலையத்தில் பெண்கள் மேற்கொண்டு வரும் மனையியல், தையல், அலங்காரப் பயிற்சிகளையும், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச சட்ட ஆலோசனைகளையும் அவர்கள் பார்வையிட்டு பாராட்டுத் தெரிவித்தனர். (க - 8)

## தலைவர் நியமிப்பு

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சி. பவனேந்திரன் யாழ். மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் பொ. சந்திரகுலசிங்கம், ஆ. சிவம்பதி ஆகியோரும் புதிய இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் இயக்குநர் சபையுடன் புதிதாக நியமனம் பெற்ற மூவரும் இணைந்து செயல்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை இராசமணி

பாரதி வீதி பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை இராசமணி 30-01-2000 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் முத்து பொன்னுத்துரை (J.P. சுதேச வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்திமலர் (வவுனியா), ஸ்ரீ ஜீவகன் (ஜேர்மனி), ஸ்ரீபாலகௌரி, ஸ்ரீபவன் (மதுவரி உத்தியோகத்தர், பருத்தித்துறை), ஜெயகௌரி (வவுனியா), லெனின் (ஜேர்மனி), ஜெயன்சிராணி, காலஞ்சென்ற பாரதிமோகன் மற்றும் பாரதிச்செல்வன், ஜீவதயாளன் (மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரான்சிஸ் சேவியர் (கனடா), கிளி (ஜேர்மனி), விஜயகுமார், திருசிங்கரட்ணம் (வவுனியா), சூரியகலா (ஆசிரியை, யா/நெல்லியடி ம.ம.வி.), நிர்மலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யாழினி, கெங்காதரன், நளாயினி, ராகுலன் (ஜேர்மனி), ராகவன் (ஜேர்மனி), ரஜீவா (ஜேர்மனி), சேதுபன், ரஜீபவன், சரத்பவன், சுஜீவா, றெனால்றீகா, ரஜீந்திரன், கயூரன், கௌதமி, கலிஸ்ரா, சுஜீகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-02-2000) புதன்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**மு.தேசிங்கம்**
**சி.விஜயகுமார்.**

*பாரதி வீதி,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

(73276)

## கதிரவேலு தம்பிப்பிள்ளை

**(இளைப்பாறிய ஆசிரியர், யட்டதாரிய எஸ்டேட், உந்துகொல)**

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் பலகாட்டையும், திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தம்பிப்பிள்ளை 31-01-2000 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிரவேலு - காசுவதி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கடவத்தை பிரபல வர்த்தகர் பொன்னம்பலத்தின் பெறாமகனும், காலஞ்சென்ற ஆறுமுகம், செல்லத்தம்பி ஆகியோரின் தம்பியாரும், பூரணத்தின் மைத்துனரும், சிவராசா (ஓசானிக் இம்பெக்ஸ்), விஜயலட்சுமி, புனிதகுமாரி, சிவசண்முகராசா (மங்கை சில்க், சுன்னாகம்), லயன் சற்குணராசா (சீமாட்டி புடைவைக்கடல் - மங்கை சில்க்யாழ்.), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி, காலஞ்சென்ற கதிரவேலு, நவரத்தினம் (மங்கைசில்க், யாழ்.), சிவமணி, டாக்டர் மனோன்மணி, குகநேசன் (இ.போ.ச.) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவநிதி, சிவரூபன், தயாநிதி, தவநிதி, செந்தூரன், சிவவதனா, சிவ மனோகர், சிவநீபன், தர்சனா, ஜீவனா, தர்சன், கஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-02-2000) செவ்வாய்க்கிழமை மாலை 3.30மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சுமங்கலி"*
*531, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

(C/10877)

தகவல்:-
**லயன் சற்குணராசா**
(மகன்)

## திருமதி சொர்ணம்மா தம்பிஜயா

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணம்மா தம்பிஜயா அவர்கள் 30-01-2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருதயனார் - இளையபிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்துவின் பாசமிகு மருமகளும், வேலுப்பிள்ளை தம்பிஜயாவின் அருமை மனைவியும், கதிரமலை (மஞ்சுளா ரேடர்ஸ், வவுனியா), பற்குணராசா (பிரான்ஸ்), பராசக்தி, மனோன்மணி, மணிமேகலை (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், சாருமதி, அன்புமலர், நடராசா தெட்சணாமூர்த்தி, வசந்தநாதன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தமிழ்ச்செல்வி, தவச்செல்வி, பங்கயற்செல்வி, அருட்செல்வன், மஞ்சுளா, கரிகரன், மயூரதி, மாருதி, கவேதா, சிந்துஜா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31-01-2000) திங்கட்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:-
**ஆ.தெட்சணாமூர்த்தி**
(மருமகன்)

(73250)

## செல்லப்பா ஐயாத்துரை

கோப்பாய்வற்றுறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா ஐயாத்துரை அவர்கள் நேற்று (31-01-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும், குலசிங்கம் (குலம் கிறீம் ஹவுஸ், உரிமையாளர், யாழ்ப்பாணம் - மானிப்பாய்), சுந்தராம்பாள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராசம்மா, சிவபாக்கியம், இரத்தினம் ஆகியோரின் சகோதரனும், மகேந்திரராஜா (பிரான்ஸ்), செல்வராணி ஆகியோரின் மாமனாரும், உதயணன் (பிரான்ஸ்), துவாரகா (பிரான்ஸ்), துவாகரன் (பிரான்ஸ்), உதயரேகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இராசையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-02-2000) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குலம் கிறீம் ஹவுஸ்,*
*ஆலடிச்சந்தி,*
*மானிப்பாய்.*

தகவல்:-
**குலசிங்கம்**
உரிமையாளர்,
குலம். கிறீம் ஹவுஸ்.

(73279)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.விஞ்ஞானச் சங்கம் நடத்தும் கருத்தரங்குத் தொடரின் ஐந்தாம் பகுதி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'பட்டதாரிகளும் தொழிற்தேர்வும் - தொடர்பும் அணுகுமுறைகளும்' என்ற பொருளில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி கருத்துரை வழங்குவார். (இ-10)

## வாதரவத்தையில் இளைஞர் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.1

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் கடந்த 29ஆம் திகதி இரவு துப்பாக்கியுடன் வந்த இருவரினால் இளைஞர் ஒருவர் வீட்டில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இரட்ணசிங்கம் கமலாகரன் என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அண்மையில் இவர் படையினரால் விசாரணை செய்யப்பட்டிருந்தார் என்றும் - பெப்ரவரி 3ஆம் திகதி மேலதிக விசாரணைகளுக்காக அச்செழு இராணுவ முகாமிற்கு வருமாறும் பணிக்கப்பட்டிருந்ததாகவும் -

அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சத்துணவு விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்லயன்ஸ் கழகத்தினர் யாழ்.மனித அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தும் வாராந்த சத்துணவு விநியோகச்சேவை இன்று தாவடி மேற்கு பத்திரகாளி அம்மன் சனசமூகநிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## ரயிலில் குண்டுவெடிப்பு

கொழும்பு,பெப்.1

கல்லோயாச்சந்தி ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்தார். ரயில் பெட்டி ஒன்று சேதமடைந்தது.

பொலநறுவையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த இரவுத் தபால் ரயில் திருகோணமலையில் இருந்து வரும் தபால் ரயிலுடன் இணைவதற்காக கல்லோயாச்சந்தி ரயில் நிலையத்தில் தரித்து நின்ற போது அந்த ரயிலின் பெட்டி ஒன்றில் இருந்த குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## கல்வி நிறுவன கொட்டகைக்கு தீ வைப்பு

வலி.கிழக்கு,பெப்.1

கோப்பாய் தெற்கில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு இரவு வேளை விசமிகள் தீ வைத்துள்ளனர்.

டச்சு வீதியில் அமைந்துள்ள இந்தக் கல்வி நிறுவனத்தின் கொட்டகை மீது நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் தீ மூட்டப்பட்டுள்ளது.

சாக்கு ஒன்று மண்எண்ணெய்யில் நனைத்து தீ மூட்டி கொட்டகை மீது வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. கொட்டகை தீப்பற்றி எரிவதைக் கண்ட அயலவர்கள் உடனடியாகத் தண்ணீர் ஊற்றி தீயை அணைத்துள்ளனர். எனினும் கொட்டகையின் ஒரு பகுதியும் தளபாடங்கள் சிலவும் தீயில் எரிந்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-180)

## கல்விக் கல்லூரி நேர்முகப் பரீட்சை

கல்விக் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக இரண்டாவது தொகுதியினருக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. கல்விக் கல்லூரிகளில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் சமூகக்கல்வி தமிழ்மொழி, இந்து சமயம், தொழிநுட்பம் ஆகிய கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காகவே இந்த நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்கள் விரைவில் உதயனில் வெளியாகும்.


## யாழ் / குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா

**யூபிலி புனித யாத்திரை ஸ்தலமாக ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழாவில் 2.02.2000 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனை, பவனி, ஆசீர்வாதமும் இடம்பெறும். 03.02.2000 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு ஆயர் தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறும்.**

***யூபிலிப் பலன்களையும் அன்னையின் அருளையும் பெற அனைவரையும் அழைக் கிறோம்.***

**பங்குத் தந்தையும்**
**மக்களும்**

விளம்பர உதவி:

**மதன்ஸ் ஸ்ரோர்ஸ்**
601, பீச் றோட், குருநகர்,
யாழ்ப்பாணம். 73278


## வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - விசேட பொதுக்கூட்டம்

**காலம் :- 02.02.2000 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி.**

**விடயம்:- பாடசாலை மாணவர்கள் முழுமையாக வராதிருப்பது பற்றி ஆராய்தல்.**

அனைத்துப் பெற்றோர்களும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்கின்றேன்.

*வசாவிளான் ம.ம.வி*
உரும்பிராய்.

(73282)

**ஆ.சி.நடராஜா**
அதிபர்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரமூர்த்தி அன்னபூரணம்

காரைநகர், மணற்காடு அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் நுவரெலியா காவேரி அம்மன் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரமூர்த்தி அன்னபூரணம் (30-01-2000) ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை (மலேயன் பென்சனியர்) - செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்துப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வைரமுத்துப்பிள்ளை சுந்தரமூர்த்தியின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், சத்தியமூர்த்தி (மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை), முருகமூர்த்தி (Holy Trinity College, நுவரெலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசேஸ்வரி, மனோகரி (பரியோவான் கல்லூரி, நுவரெலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியகீர்த்தி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), தர்சனா (மாணவி, நுவரெலியா திருக்கன்னியர்மடக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பத்மநாதன், லங்கநாதன் (மண்பகுப்பாய்வாளர், மலேசியா), பஞ்சநாதன் (கணக்காளர், உள்ளூராட்சி சபை, மன்னார்), டாக்டர். சந்திரசேகரம் (லண்டன்), அன்னபாக்கியம் (கொழும்பு), ராணிதேவி (வவுனியா), ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் புஞ்சிபொறளை றேமண் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று (31-01-2000) திங்கட்கிழமை நண்பகல் 1.00மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34/17, வளாக ஒழுங்கை*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
**சத்தியமூர்த்தி சிவராசேஸ்வரி**
(மருமகள்)

(73274)

## திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம்

மல்லாகம் மணிமனையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம் 30-01-2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற எம்.சுப்பிரமணியம் J.P - பவளம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், சி.பஞ்சலிங்கம் (அட்வகேட்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சு.மனோன்மணி, அநகுலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், எம்.எஸ். சுப்பிரமணியம் (சட்டத்தரணி), ச.அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர்), சி.மகாலிங்கம் (பொறியியலாளர், லண்டன்), காலஞ்சென்ற எம்.எஸ்.சுந்தரலிங்கம் (அட்வகேட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அ.ஆனந்தகுமாரசாமி (கணக்காளர், லண்டன்), சபூங்கோதை (அமெரிக்கா), கலாநிதி அ.பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), கலாநிதி அ.செந்தில்செல்வன் (கனடா), ந.ஆனந்தகௌரி (அமெரிக்கா), ஆகியோரின் குஞ்சம்மாவும், ச.சர்வேந்திரன் (கணக்காளர், அமெரிக்கா), ஆ.சறோஜாதேவி (லண்டன்), பா.உஷாகாயத்திரி (அமெரிக்கா), ஆநவரெந்தன் (பொறியியலாளர், அமெரிக்கா), செ.லோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சின்னமாமியாரும் சுரவீந்திரன் - கனர்ணம்மா ஆகியோரின் வளர்ப்புச்சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-02-2000) செவ்வாய்க்கிழமை காலை 9.30மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணிமனை,*
*மல்லாகம்.*

(73283)

தகவல்:-
**சு.செல்வராஜன்**
(பெறாமகன்)

## சத்துணவு விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.லயன்ஸ் கழகத்தினர் யாழ். மனித அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தும் வாராந்த சத்துணவு விநியோகச்சேவை இன்று தாவடி மேற்கு பத்திரகாளி அம்மன் சனசமூகநிலையத்தில் நடைபெற வுள்ளது. (ஐ-7)

---

## பகிஷ்கரிப்பால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து வந்த புலனாய் வுக் குழுவினரால் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

மூவரும் கைது செய்யப்பட் டுள்ளதாகத் தெரிவித்து மாணவர் கள் இருவரும் விடுவிக்கப்படும்வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்று மாணவர்கள் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை உரும்பி ராய்ப் பகுதி மாணவர்கள் பாடசா லைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் குடாநாடு தழுவிய ரீதி யில் பகிஷ்கரிப்புப் போராட்டம் விரி வடைந்தது. இதனால் குடாநாட்டுப் பாடசாலைகள் நேற்று வெறிச்சோடிக் கிடந்தன. சில பாடசாலைகளுக்கு காலையில் மாணவர்கள் சொற்ப எண்ணிக்கையில் சமுகமளித்த போதும் பகல் 12 மணியுடன் அவர்க ளும் பாடசாலையிலிருந்து வெளி யேறினர்.

வடமராட்சி, தென்மராட்சி, வலி காமம் கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகள் பெரும்பாலும் இயங் கவில்லை. தீவகம், வேலணைப் பகு திகளிலுள்ள பாடசாலைகள் நேற்று வழமைபோல இயங்கியதாக அங்கி ருந்து கிடைத்த தகவல்கள் தெரி வித்தன.

(உ-5-10-86-173-15-17-102-109-152-117)

## திருடர் கோஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகச் சுட்டும், கிரனேட் வீசியும் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக் கப்படுகிறது. இதனால் அப்பகுதி யில் பதற்றம் நிலவியது.

ஈச்சமோட்டை சந்தனமாதா வீதி யில் உள்ள ஒரு வீட்டில் கூரை யைப் பிரித்து இறங்கிய இவர்கள் அங்கிருந்து கஸெட் செட், றேடியோ உட்பட சில பொருள்களை எடுத் துக்கொண்டு தப்பிச்சென்றவேளை பழைய பூங்கா வீதியில் உள்ள ஈச்சமோட்டைக் குளத்துக்குச் சமீப மாக படையினரிடம் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

அச்சமயம் படையினர் மேற் கொண்ட தாக்குதலில் ஒருவர் பலி யானார்.

குருநகர் டேவிற் வீதியைச் சேர்ந்த அருண் அண்ணாம்பி என அழைக்கப்படும் அருண் சந்திரன் (வயது 30) என்பவரே பலியானவர் என்று அடையாளம் காணப்பட்டுள் ளது. ஏனையோர் தப்பி ஓடியுள்ள னர்.

இறந்தவரின் சடலம் நேற்றுக் காலை வீதியில் கிடந்தது. அருகே கஸெட் செட் ஒன்றும் காணப்பட் டது. பின்னர் சடலம் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது. (ஐ-5-15-17-139-173-51)

---

## கிரனேட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொண்டதாகக் கூறப்படு கிறது.

சடலத்தில் கைகள் இரண்டும் சிதறிய நிலையிலும் வயிறு பிளந்த நிலையிலும் காணப்பட் டது.

இச்சம்பவத்தின் போது இரு படையினர் காயமடைந்ததாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன. அப்பகுதியில் ஒருவர் படையி னரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8-15)

## மட்டு சி.ஐ.டி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற பூசையில் கலந்து கொண்டுவிட்டு ஆலயத்துக்கு அரு கில் உள்ள பொலீஸ் காவல்நிலை யத்தை நோக்கி மோட்டார் சைக்கி ளில் சென்றவேளை இவர்மீது துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அவரது மனைவி காயமின்றித் தப்பிக் கொண்டார். (ஐ-7-150)

---

## இரு மாணவரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக இராணுவத்தரப்புக் கூறுகின் றது.

"புலன் விசாரணையாளர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தாயாரை மட்டுமே கூட்டிச் செல்ல விரும்பி னார்கள். ஆனால் தமது பிள்ளைகள் இருவருக்கும் வேறு துணை இல்லா ததால் அவர்கள் இல்லாமல் தான் கொழும்புக்குச் செல்ல முடியாது என்று தாயார் கூறியதால் வேறு வசதியின்றி மூவரும் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்" என்றும் இராணுவத் தரப்பில் மேலும் தெரி விக்கப்பட்டது. (உ)


**Personal Class**

பொருளியல்

இ. இராஜேஸ்வரன்

**PAPER CLASS**

புதன், வியா.
6.15 a.m (ப.நே)

225, Temple Road,
Nallur
(U.N.H.C.R. அருகில்)

(73249)



## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாச உடுவில் பிராந்திய சபை நிதிக்காக 17.01.2000 அன்று நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 15.04.2000 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
உடுவில் பிராந்திய சபை.

(73290)



ஒரு நற்செய்தி !

## கலைமகள் வர்த்தக நிலையம்

286, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

இதுவரை காலமும் மொத்த வியாபாரமாக இயங்கி வந்த எமது ஸ்தாபனம் இன்று (2000-02-01) செவ்வாய்க்கிழமை முதல் மொத்தமாகவும் சில்லறையாகவும் இயங்க உள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்மிடம்:

* பாடசாலைக்குரிய காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்
* பால்மா வகைகள்
* அலங்காரப் பொருள்கள் (பென்சி)
* மளிகைப் பொருள்கள்

*அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஏற்றதோர் ஸ்தாபனம்*

**கலைமகள் வர்த்தக நிலையம்**

286, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.எண்: 021-2410

குறிப்பு:- வாடிக்கையாளர்கள் தரும் ஓடர் பொருள்கள் அவர்களது இல்லத்துக்கே கொண்டு சென்று விநியோகம் செய்யப்படும். (மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசம்)

(73155)



*வெளிவந்துவிட்டது!*

# பணம்

பொருளியல் நூல்



ஆசிரியர் வே. கருணாகரன்

சர்வதேச வர்த்தகம், . வர்த்தகமாற்றுவீதம், பொதுப் பொருளாதாரம், பேரினப்பொருளாதாரம் மற்றும் நூல்கள் விற்பனையாகின்றன.

(73248)



## தேவை

### தையல் வேலையாள்கள் (ஆண்/பெண்)

நகரில் பிரபல்யம் வாய்ந்த ஆடைதயாரிக்கும் நிறுவனம் ஒன்றிற்கு நவீன டிசைன்களில், ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கு ஏற்ற ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடிய திறமைசாலிகள் தேவை.

திறமைக்கேற்றவாறு சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவேண்டிய முடிவு திகதி:- 15.02.2000

விளம்பர இல. 994
மே/பா. உதயன்
யாழ்ப்பாணம்.

(73277)



**Jaffna College Institute of Technology**

**A NAME TRUSTED FOR ITS EXCELLENT SERVICE!**

The following courses will commence in middle of Feb.

*Open University Exemptions are given to our Diploma C...*

**1. Diploma in Computer Programming & Data Processing (one year)**
**[Contains Ms Excel, Pascal, Visual Basic & Access]**

**2. Advanced Diploma in Computer Programming & Data Processing (one year**
**[Contains Ms Excel, C, Visual Basic & FoxPro]**

**3. Application Packages & Programming Languages**
* Ms Excel 2000 * Pascal
* Ms Word 2000 * Dbase
* Ms Access 2000 * Visual Basic
* Ms Power Point 2000 * C/C++

**3. Craft Courses (will include basic introduction to computers -** தமிழ் மொழி மூலம்)
* Mechanical Craftsman ship Practice
* Electrical Wiring & Installation Practice
* Auto Mobile Technology (Basic Car Driving Skills Will Be Taught)
* Radio & T.V Servicing

**4. Diploma & Technician Certificate Course in**
* Mechanical
* Electrical power
* Electronics & Telecommunications
* Civil Draftmanship

❋ க.பொ.த. (O/L & A/L) பாடத்திட்டத்திற்கு அமைவான இலத்திரனியல் - மின்னியல் துறையின் செயல்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படும்.
❋ குறைந்த கட்டணங்கள் - தவணை முறையில் செலுத்தும் வசதி.
❋ விண்ணப்பப்படிவங்களை வட்டுக்கோட்டையிலும் யாழ்.கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
❋ விண்ணப்பப்படிவங்களை நேரில் அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்கவும்.
❋ பெப்ரவரி 7ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும்.

**The Computer courses will be conducted at our Jaffna Centre too.**

**Director,**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai/Jaffna Centre,**
**464, Hospital Road (OPPOSITE - O.P.D)**
**Jaffna. TEL: 021-3382**

(C/10834)


## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி கந்தையா

வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி பாக்கிய லட்சுமி கந்தையா அவர்கள் நேற்று (31.01.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொலீஸ் உத்தியோகத்தர் கந்தையா (கந்தமுத்து) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தேவதாஸ் யோகலட்சுமி - குகதாஸ் (கனடா), ஜெயதாஸ் (P.S.சேவிஸ் ஸ்ரேசன், யாழ்.) விஜயதாஸ்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பூலோகநாதன் (லங்கா சிமெந்து நிறுவனம்), சரோஜினி(கனடா) ரஜனி, சந்திரமதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் அன்பரசி சிவரூபன் அபிராம், அனோஜன், சபேதா, விஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தி யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2000) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்ககாக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
க.ஜெயதாஸ (மோகன்)
(மகன்) (C/10881)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.